Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

SATURDAY, JULY 24, 2021

சனிக்கிழமை ஜூலை 24, 2021 | ஒளி: 07 கதிர்: 56 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free



ஒலிம்பிக் 2020

## கோலாகலமாக ஆரம்பம்

ஒலிம்பிக் 2020 இன் ஆரம்ப விழா, ஜப்பான்-டோக்கியோவில் உள்ள தேசிய அரங்கத்தில் இலங்கை நேரப்படி, நேற்று (23) மாலை 4.30 மணிக்கு கோலாகலமாக ஆரம்பமானது. இலங்கை, இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், இங்கிலாந்து, பிரான்ஸ், சீனா, அவுஸ்திரேலியா உள்பட 204 நாடுகளைச் சேர்ந்த 11,200-க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் இதில் பங்கேற்றுள்ளனர்.

தொடர்ச்சி P2

## டயகம சிறுமி விவகார விசாரணையில்

# மற்றுமொரு முடிச்சு அவிழ்ந்தது



மனைவி, மாமா, மைத்துநர், தரகர் சிக்கினர்

72 மணிநேரம் தடுத்து வைத்து விசாரணை

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பணிப் பெண்ணாக இருந்த மற்றுமொரு பெண்ணும் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாகியுள்ளார்

தொடர்ச்சி P2

## விபத்துப் பிரிவை படமெடுத்த 'உஷ்'





கொழும்பு தேசிய வைத்தியசாலையின் திடீர் விபத்துப் பிரிவு விடுதிக்குள் புகுந்த நாகப்பாம்பு ஒன்று படமெடுத்து ஆடியதால், அங்கிருந்த ஊழியர்கள் மற்றும் நோயாளர்கள், அல்லோலகல்லோலப்பட்டனர். நாக பாம்பொன்று விடுதிக்குள் திடீரென நுழைந்து, ஊர்ந்து சென்றதைக் கண்ட பாதுகாப்பு அதிகாரிகள், கடும் முயற்சிகளின் பின்னர் அந்தப் பாம்மைப் பிடித்து போத்தல் ஒன்றுக்குள் அடைத்ததாகத்

தொடர்ச்சி P2

## பொத்துவிலில் கடும் கட்டுப்பாடு

எம்.எஸ்.எம். ஹனீபா



பொத்துவில் பிரதேசத்தில் கொரோனா தொற்றுப் பரவலை கட்டுப்படுத்தும் முகமாக நேற்று (23) வெள்ளிக்கிழமை (23) முதல் மறுஅறிவித்தல் வரை கடும்கட்டுப்பாடுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில், பொத்துவில் பிரதேசத்திலுள்ள சகல வர்த்தக நிலையங்களும் தினமும் காலை 7 மணி முதல் பி.ப

தொடர்ச்சி P2

## முகக்கவசம் இன்றேல் உடனே சிக்குவர்



சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றாத, முகக்கவசங்களை முறையாக அணியாதவர்களைக் கைது செய்வதற்காக, மேல் மாகாணத்தில் விசேட பொலிஸ் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன.

மேல் மாகாணத்தில் கூடுதலான எண்ணிக்கையானோர் முகக்கவசங்களை அணிவதில்லை என புலனாய்வுப் பிரிவினர் தகவல்களைக் கொடுத்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## 6 கிலோ கிராம் என்.சி நோர்வூட்டில் சிக்கியது

காமினி பண்டார இலங்கதிலக்க

பாடசாலை மாணவர்கள், மேலதிக வகுப்புகளுக்குச் செல்வோர், ஓட்டோ சாரதிகள் உள்ளிட்டவர்களை இலக்குவைத்துக் கொண்டுவரப்பட்ட என்.சி என்றழைக்கப்படும் போதையூட்டும் ஒருவகையான தூளை நோர்வூட் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தொடர்ச்சி P2



## நினைவேந்தல்

கறுப்பு ஜூலை நினைவேந்தல், யாழ்ப்பாணம் மாநகர சபையில் மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தலைமையில் நேற்று (23) காலை நடைபெற்றது. (படப்பிடிப்பு நிதர்ஷன் வினோத்)

## வன்னிக்குள் திடீரென ஊடுருவியது டெல்டா

நாட்டில் பரவிக்கொண்டிருக்கும் கொரோனா வைரஸின் டெல்டா திரிபு, கிடுகிடுவென அதிகரித்துச் செல்கிறது என சுகாதாரப் பிரிவு அறிவித்துள்ளது. அதனடிப்படையில், டெல்டா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை, 61ஆக அதிகரித்துள்ளது.

தொடர்ச்சி P2

## 'யுத்தத்தை முடித்தவர்களே தீர்வையும் வழங்க வேண்டும்'



யுத்தத்தில் நடந்த அனர்த்தங்களுக்குப் பொறுப்பேற்று, அவற்றுக்குப் பரிகாரமாக தமிழ் மக்களின் பிரச்சினைகளை இந்த அரசாங்கமே தீர்த்து வைக்க வேண்டும் என, தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

கறுப்பு ஜூலையில்

## மன்னாரில் 15 அம்சங்களுடன் வாயைக் கட்டி மௌனம்



எஸ்.றொசேரியன் லெம்பேட்




கறுப்பு ஜூலை தினமான நேற்று (23) வெள்ளிக்கிழமை, 15 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக மௌன கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதனை, தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் ஏற்பாடு செய்திருந்தது. அவ்வியக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் நடைபெற்ற இந்தக்

தொடர்ச்சி P2

விசேட சுற்றிவளைப்பு

## கோப்பாயில் 9 பேர் கைது


நிதர்ஷன் வினோத்



யாழ். கோப்பாய் பொலிஸ் பிரிவில் நேற்று (23) அதிகாலை 2 மணி தொடக்கம் காலை 6 மணிவரை முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்புத் தேடுதலில் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த லியனகேயின் வழிகாட்டலிலும் அவரது பங்கேற்புடனும் மூத்த

தொடர்ச்சி P2



அறிவுரைகள்

- விண்ணப்பதாரி 30 வயதை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்
- விண்ணப்பத்தை நிரப்பும் போது தேசிய அடையாள அட்டையில் உள்ளவாறு பெயரை குறிப்பிடுதல் வேண்டும்
- விண்ணப்பத்தை சிங்களம் அல்லது ஆங்கில மொழியில் தெளிவான எழுத்தில் பூர்த்தி செய்ய வேண்டும்
- விண்ணப்பத்தின் வலது பக்க மேல் மூலையில் 40mmx40mm புகைப்படமொன்றை ஒட்ட வேண்டும்
- தேசிய அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ்கள், ... நிழற்படப் பிரதிகள் மற்றும் ... குற்றச்சாட்டு அல்லது நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டிருப்பின் அவற்றின் நிழற்படப் பிரதிகளையும் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.
- நீதிமன்ற பகுதியை நிரப்பும் போது தான் குடியிருக்கும் பிரதேசத்தைச் சேர்ந்த சரியான நீதிமன்றத்தை தெரிவு செய்ய வேண்டும்.

## தமிழ்மொழிக்கு உரிமை மறுப்பு

சமாதான நீதவான் பதவிக்கான விண்ணப்பப்படிவத்தை, தமிழ் மொழியில் நிரப்புவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளமை, மும்மொழிக் கொள்கையைக் கேள்விக்குறியாக்கியுள்ளது என சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தொடர்ச்சி P2

## 7 நாள்களில் எல்லைகள் திறப்பு





தற்போது அமுலில் இருக்கும் மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடுகள், ஓகஸ்ட் 1ஆம் திகதி முதல் முழுமையாகத் தளர்த்தப்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம அறிவித்துள்ளார்.

ஓகஸ்ட் 1ஆம் திகதிக்குப் பின்னர் மாகாணங்களுக்கு இடையில், ரயில் மற்றும் பஸ்கள் போக்குவரத்தில் ஈடுபடும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

எனினும், சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றாது, தான்தோன்றித்தனமாக செயற்படுவார்களாயின், அடுத்தகட்டங்களில் முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறுமிக்கு நீதி வேண்டி

## கையெழுத்துப் போராட்டம்

க. அகரன்



முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியூதீனின் வீட்டில் பணிபுரிந்து மரணமடைந்த சிறுமிக்கு நீதி வேண்டி, வவுனியாவில் கையெழுத்துப் பெறும் போராட்டம், நேற்று (23) முன்னெடுக்கப்பட்டது.

சுயாதீன தமிழ் இளைஞர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் பெறப்படும் கையெழுத்துகள் அடங்கிய பிரதிகள், ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## விபத்துப் பிரிவை படமெடுத்த 'உஷ்'

தெரிவித்த வைத்தியசாலையின் தலைமைத் தாதி புஷ்பா ரம்யானி டி சொய்சா, ஓர் அச்சம் நிலைமையொன்றே ஏற்பட்டிருந்தது என்றார்.

வனவிலங்குகளைப் பொறுப்பேற்கும் நிறுவனங்களுக்கு அறிவித்த போதும், யாரும் வராத காரணத்தால், நேற்றுமுன்தினம் மாலையே, தாங்களாகவே பிடித்து, தூரப் பிரதேசத்தில் உள்ள காடொன்றில் விட்டுவிட்டதாகவும் தெரிவித்தார்.

மேலும், இந்த வைத்தியசாலைக்குள் நாய், பூனைகள் உள்ளிட்ட பல விலங்குகள் வந்துள்ள போதும், நாகப்பாம்பு உள்ளே வந்த முதலாவது சந்தர்ப்பமாகும் என்றார்.

## 'முகக்கவசம் இன்றேல் உடனே சிக்குவர்'

இதனையடுத்தே, அவ்வாறானவர்களைக் கைது செய்வதற்காக, விசேட பொலிஸ் குழுகள் களமிறக்கப்பட்டுள்ளன.

தனி நபர்களும் களமிறக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், 30 பொலிஸ் குழுக்களும் களமிறக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, வார இறுதி நீண்ட விடுமுறைகளையொட்டி, நாடளாவிய ரீதியில் 10 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பயணக் கட்டுப்பாடுகளை மீறிப் பயணிப்போருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## வன்னிக்குள் திடீரென ஊடுருவியது டெல்டா

அவ்வாறானவர்கள், கொழும்பில் கொலன்னாவ, கோட்டை, நவகமுவ ஆகிய பிரதேசங்களிலும் வத்தளையில் மாபாகே பிரதேசத்திலும், அங்கொட, இரத்மலானை, கட்டுநாயக்க, நீர்கொழும்பு, பேருவளை, காலி, மாத்தறை, தம்புள்ளை, வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களிலேயே இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கோப்பாயில் 9 பேர் கைது

பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் பங்களிப்புடன், இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, 9 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 22, 23 மற்றும் 25 வயதுடைய மூவர், வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஏனைய 6 பேரும் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்படுவார்கள் என்று கோப்பாய் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## மன்னாரில் 15 அம்சங்களுடன்...

கவனயீர்ப்புப் போராட்டத்தில், மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ். ஜெயபாலன் குரூஸ் அடிகளார், மதத் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

தமது வாயை கறுப்புத் துணியால் கட்டியவாறு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், 15 அம்சக் கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

"எரிபொருள், அத்தியாவசியப் பொருள்களின் விலையை அதிகரிக்கக் கூடாது", "விவசாயிகள், கடற்றொழிலாளர்களுக்கு மானியம் வழங்கல்", "வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்துக்குப் பதில் வேண்டும்", "ஜனநாயகப் போராட்டங்களுக்கு இடமளிக்க வேண்டும்", "கொத்தலாவல பல்கலைக்கழக சட்ட மூலத்தை மீளப்பெறல்", "டயகம சிறுமியின் மரணத்துக்கு நீதியான விசாரணை வேண்டும்" போன்ற கோரிக்கைகள் இங்கு முன்வைக்கப்பட்டன.

> **"டயகம சிறுமியின் மரணத்துக்கு நீதியான விசாரணை வேண்டும்" போன்ற கோரிக்கைகள் இங்கு முன்வைக்கப்பட்டன.**

# மற்றுமொரு முடிச்சு அவிழ்ந்தது

என்பது விசாரணைகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில், அந்தப் பெண்ணை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் கீழ், பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் மைத்துநரான (வயது 44) (மனைவியின் சகோதரர்) கைது செய்யப்பட்டுள்ளார்.

"இவர்கள் அனைவரும் நேற்று (23) அதிகாலை வேளையில் கைது செய்யப்பட்டுள்ளனர்" என பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, நேற்று (23) தெரிவித்தார்.

அதேவேளை, டயகம சிறுமி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் ரிஷாட்டின் மனைவியான ஷெஹாப்தீன் ஆயிஷா (வயது 46), மனைவியின் தந்தையான மொஹமட் ஷெஹாப்தீன் (வயது 70) ஆகியோரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சரான பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் கொழும்பு இல்லத்தில் பணிப் பெண்ணாக வேலை செய்தபோது, தலவாக்கலை- டயகமவைச் சேர்ந்த 16 வயதான சிறுமி எரிகாயங்களுக்கு உள்ளாகி பின்னர் மரணமடைந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் 20 வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸ் பேச்சாளர், குறித்த சிறுமிக்கு முன்னதாக அங்கு இரண்டு பெண்கள் பணிபுரிந்துள்ளதாகக் கூறினார்.

அவர்கள் இருவரையும் தரகரான டயகம பிரதேசத்தைச் சேர்ந்த பொன்னையா பண்டாரம் என்பவர் அழைத்து வந்துள்ளதாகவும் அந்தப் பணிப் பெண்களில் ஒருவரின் தற்போதைய வயது 22 என்றும் மற்றையவரின் வயது 30 என்றும் குறிப்பிட்டார். டயகம பகுதியில் வசிக்கும் 22 வயது யுவதி, 2015 - 2019 காலப்பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்துள்ளார்.

அதன்போது, நபர் ஒருவரால் இரண்டு முறை பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டதாக யுவதி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

> **இந்நிலையில், அந்தப் பெண்ணை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் கீழ், பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் மைத்துநரான (வயது 44) (மனைவியின் சகோதரர்) கைது செய்யப்பட்டுள்ளார். "இவர்கள் அனைவரும் நேற்று (23) அதிகாலை வேளையில் கைது செய்யப்பட்டுள்ளனர்"**

இது தொடர்பான விசாரணையில் ரிஷாட் பதியுதீனின் மனைவியின் சகோதரனான மதவாச்சி பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய செயாப்தீன் ஷ்மதீன் என்ற நபரே வன்புர்ணவு செய்துள்ளதாக தெரியவந்துள்ளது. இதனையடுத்து, விசாரணை அதிகாரிகளால் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

டயகம சிறுமியின் மரணம் தொடர்பான விசாரணைகளுக்கு புறம்பாக இந்த சம்பவம்

> **இதேவேளை, டயகம சிறுமியை கொழும்புக்கு அழைத்துவந்து பணிக்கு அமர்த்திய தரகரான டயகம பிரதேசத்தைச் சேர்ந்த பொன்னையா பண்டாரம் அல்லது சங்கர் எனப்படும் 64 வயதான நபரும் கைது செய்யப்பட்டுள்ளார். தரகர், பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஏற்கெனவே பணிப் பெண்ணாக இருந்த யுவதியின் தந்தையென அறியமுடிகின்றது**

தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸ் பேச்சாளர், முன்னாள் அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து குறித்த யுவதி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாகக் கூறினார்.

இதேவேளை, டயகம சிறுமியை கொழும்புக்கு அழைத்துவந்து பணிக்கு அமர்த்திய தரகரான டயகம பிரதேசத்தைச் சேர்ந்த பொன்னையா பண்டாரம் அல்லது சங்கர் எனப்படும் 64 வயதான நபரும் கைது செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில், சந்தேக நபர்களை 72 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து விசாரணை செய்ய எதிர்பார்ப்பதாகவும் பொலிஸ் பேச்சாளர் கூறினார். டயகம மரணம் தொடர்பிலான விசாரணைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை கவனிப்பதற்கு சட்டமா அதிபர் சஞ்ஜய ராஜரட்னம், நேற்று முன்தினம் (22) குழுவொன்றை நியமித்தமை குறிப்பிடத்தக்கது.

## கோலாகலமாக ஆரம்பம்

கடந்த 121 நாள்களாக ஜப்பானை வலம் வந்த ஒலிம்பிக் தீபம், தொடர் ஓட்டமாக அரங்குக்குள் கொண்டு வரப்பட்டு, ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டு, உத்தியோகபூர்வமாக அரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தத் தொடக்க விழாவில் ஜப்பானின் வரலாறு மற்றும் பாரம்பரியத்தை பறைசாற்றும் கலாசார நிகழ்ச்சிகளும் முக்கியத்துவம் பெற்றிருந்தன. விழாவின் முக்கிய அம்சமாக 204 நாட்டு அணியினரும் தங்களது தேசிய கொடியுடன் மிடுக்காக அணிவகுத்தனர். இலங்கையின் தேசியக் கொடியை வீரர்களான மில்கா மற்றும் சாமர ஆகியோர் ஏந்திவந்தனர்.

> **நான்கு வருடங்களுக்கு ஒருமுறை இடம்பெறும் ஒலிம்பிக் போட்டிகள் கடந்த 2020ஆம் ஆண்டு நடைபெற்றிருக்க வேண்டும். எனினும், கொரோனா வைரஸ் பரவல் அச்சம் காரணமாக, அவை பிற்போடப்பட்டு, இவ்வாண்டு நடைபெறுகின்றது.**

வழக்கமாக ரசிகர்கள் பட்டாளங்களால் மைதானங்கள் நிறைந்திருக்கும். எனினும், முன்முறை கொரோன அச்சம் காரணமாக ரசிகர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதனால் சுமார் 68 ஆயிரம் இருக்கை வசதி கொண்ட மைதானத்தில் மிக முக்கிய பிரமுகர்களைக் கொண்டு, சுமார் 1000 பேரே விழாவைக் கண்டுகளித்தனர்.

இதில் ஜப்பான் மன்னர் நருஹிட்டோ, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் மனைவி ஜில் பைடன், பிரான்ஸ் அதிபர் மேக்ரான், இலங்கையின் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரும், டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் நிறுவன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான நாமல் ராஜபக்ஷ ஆகியோரும் அடங்குவர்.

நான்கு வருடங்களுக்கு ஒருமுறை இடம்பெறும் ஒலிம்பிக் போட்டிகள் கடந்த 2020ஆம் ஆண்டு நடைபெற்றிருக்க வேண்டும். எனினும், கொரோனா வைரஸ் பரவல் அச்சம் காரணமாக, அவை பிற்போடப்பட்டு, இவ்வாண்டு நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 6 கிலோகிராம் என்.சி நோர்வூட்டில் சிக்கியது

ஓட்டோ சாரதி உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதுடன், அவர்களிடமிருந்தும் அவர்கள் வழங்கிய தகவல்களின் பிரகாரமும் ஆறு கிலோ 400 கிராம் என்.சி கைப்பற்றப்பட்டுள்ளது என நோர்வூட் பொலிஸ் நிலையத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரேமலால் தெரிவித்தார். 16 பக்கெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் 400 கிராம் நிறையில் பொதிசெய்யப்பட்டிருந்தன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டோவொன்றில் 400 கிராம் என்.சி, விற்பனை செய்வதற்காக எடுத்துச் செல்லப்படுகின்றமை தொடர்பில் நோர்வூட் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே, ஓட்டோ சுற்றிவளைக்கப்பட்டது. அதன்போது கைது செய்யப்பட்டவர்கள் வழங்கிய தகவல்களை அடுத்து, நோர்வூட் நகரிலுள்ள வர்த்தக நிலையமொன்று சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அங்கிருந்து 400 கிராம் நிறையைக் கொண்ட மேலும் 13 பக்கெட்டுகள் கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

நோர்வூட் நகரைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரால், இந்த என்.சி, எனும் போதையூட்டும் தூள், கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளது. அந்த வர்த்தகரின் வீட்டை சோதனைக்கு உட்படுத்திய வேளையில், 400 கிராம் நிறைகொண்ட மேலும் இரண்டு பக்கெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த 400 கிராம் நிறையைக் கொண்ட என்.சி, பக்கெட் ஒன்று 6,000 ரூபாய்க்கும், 20 கிராம் நிறையைக்கொண்ட பக்கெட் ஒன்று 300 ரூபாய்க்கு சில்லறைக்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்களையும் கைப்பற்றப்பட்ட, போதையூட்டும் என்.சி. பக்கெட்டுகளையும் ஹட்டன் நீதவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட என்.சி. போதையூட்டும் பொருளின் உள்ளூர் சந்தைப்பெறுமதி ஒரு இலட்சம் ரூபாயாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மூவரும் நோர்வூட் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## பொத்துவிலில் கடும் கட்டுப்பாடு

2 மணிவரை மட்டுமே திறப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது" என, பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எச். அப்துல் றஹீம் தெரிவித்தார்.

"பொத்துவில் கொரோனா தடுப்புச் செயலணியின் குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது" என்றார்.

தனிமைப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் முற்றாக முடக்கப்பட்டுள்ள பிரதேசங்களான பொத்துவில் 09 குண்டுமடு மற்றும் 13 பாக்கியாவத்தை பிரதேசம் தொடர்ந்தும் முடக்க நிலையில் இருக்கும் என்பதுடன் தொற்றுப் பரவல் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு முடக்கப்பட்ட பிரதேசங்களை மீளவும் திறப்பது பற்றி பின்னர் அறிவிக்கப்படும்" என்றார்.

தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் தனிமைப்படுத்தல் சட்டத்தினை மீறி சில வர்த்தக நிலையங்கள் திறந்து இருப்பதாகவும், மக்கள் வீதிகளில் நடமாடுவதையும் காணக் கூடியதாக உள்ளது என்றும் தெரிவித்த அவர், இவர்களை கைது செய்வதற்கு பொலிஸாரும், இராணுவத்தினரும் மற்றும் சுகாதாரத் துறையினரும் கூட்டாக இணைந்து விசேட ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

பொத்துவில் பிராந்தியத்தில் கொவிட்-19 தாக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இக் காலத்தில் எக்காரணம் கொண்டும் அத்தியாவசிய தேவைகளைத் தவிர, ஏனைய தேவைகளுக்காக, வெளி மாவட்டங்களுக்கு செல்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும் தெரிவித்த அவர், வீடுகளை விட்டு வெளியேறாமல் இருப்பதே உசிதமானது என்றார்.

## 'யுத்தத்தை முடித்தவர்களே தீர்வையும் வழங்க வேண்டும்'

"2009ஆம் ஆண்டு யுத்தத்தை நடத்தி முடித்த இன்றைய அரசாங்கம், 2015 வரை ஆட்சியில் இருந்தது. அந்நேரத்தில், தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி, தமிழ் மக்களின் மனதில் இடம்பிடித்திருக்க வேண்டும். அதை அவர்கள் செய்யத் தவறிவிட்டனர்" என்றார்.

ஊடகங்களுக்கு நேற்று (23) அனுப்பியிருந்த ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்திருந்த அவர், 'யுத்தம் நடத்திய தரப்பு மீண்டும் ஆட்சிபீடம் ஏறியுள்ளது. அதுவும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அங்கத்தவர்கள் ஜனாதிபதி, பிரதமர், நிதியமைச்சர் மற்றும் பல மிக முக்கிய பொறுப்புக்களிலும் உள்ளார்கள்" என்றும் நினைவுப்படுத்தினார்.

"அவர்கள் நினைத்தால் ஒரே இரவில், ஒரே மேசையில் இந்தப் பிரச்சினைக்கு உடனடித் தீர்வைக் காணலாம்.

ஏனையவர்களை விட இவர்களுக்கே அதிக பொறுப்பு உண்டு. ஏனெனில், யுத்தத்தை நடத்தியவர்கள் இவர்களே.

"ஒரு நாட்டில் தனது குடிமக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருந்தும். யுத்த நேரத்தில் அதனை செய்யத் தவறிவிட்டது என பலராலும் குற்றம் சுமத்தப்பட்டிருக்கும் இந்த நேரத்தில், யுத்தத்தில் நடந்த அனர்த்தங்களுக்கு பொறுப்பேற்று, அவற்றுக்குப் பரிகாரமாக தமிழ் மக்களின் பிரச்சினைகளை இந்த அரசாங்கம் தீர்த்து வைக்க வேண்டும்.

"இந்த அரசாங்கத்தை விட்டால் வேறு எந்த அரசாலும் எமது மக்களின் பிரச்சினைக்குத் தீர்வைக் காண முடியாது. இதனை இன்றைய அரசாங்கம் நன்கு புரிந்துகொண்டு, தட்டிக்கழிக்காமல் ஏனையவர்கள் மீது பழியைப் போடாது செயலாற்ற வேண்டிய தருணம் இதுவே" என அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ்மொழிக்கு உரிமை மறுப்பு

சமாதான நீதவான் பதவிக்கான விண்ணப்பங்கள் நீதியமைச்சு கோரியுள்ளது. அதற்கான வழிகாட்டியையும் மும்மொழிகளிலும் அனுப்பிவைத்துள்ளது. எனினும், விண்ணப்பப்படிவத்தைசிங்களம் அல்லது ஆங்கிலம் ஆகிய மொழிகளிலேயே நிரப்ப வேண்டும் என அவ்வழிகாட்டி பத்திரத்தில், அறிவுறுத்தியுள்ளது. நீதி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள குறித்த விண்ணப்பப்படிவம் மும்மொழிகளிலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கையெழுத்து போராட்டம்

இதன்போது கருத்துத் தெரிவித்த ஏற்பாட்டாளர்கள், "நாடு முழுவதும் சிறுவர், சிறுமிகள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். அவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. அவர்கள் பணி செய்யும் பகுதிகளில் பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். இதற்குக் கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்" என்றனர்.

அத்தோடு, "டயகம சிறுமியின் மரணத்துடன் தொடர்புபட்டவர்கள் தண்டிக்கப்பட்டு, நீதி நிலைநாட்டப்பட்ட வேண்டும். சிறுவர்களை வேலைக்கு அமர்த்துபவர்களையும் தரகர்களையும் கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும்" எனவும் அவர்கள் வலியுறுத்தினர்.

டயகம சிறுமியின் மர்ம மரணம்:

# சிறுமியை ரிஷாட்டுக்கு தெரியாதா?

## பொன்னையாவுக்கும் நாகையாவுக்கும் என்ன தொடர்பு?



பா. நிரோஸ்

முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்து மர்மமான முறையில் உயிரிழந்த சிறுமி விவகாரத்தில், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, பொலிஸாரின் விசாரணைகளில் திருப்தியடைய முடியாதென ஐக்கிய மனித உரிமைகள் அமைப்பின் பணிப்பாளர் ப்ரனிதா வர்ணகுலசூரிய தெரிவிக்கிறார்.

சிறுமி தீக்காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தது முதலே, இந்த விடயத்தை தேடியறிந்து இது தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகளையும் ப்ரனிதா வர்ணகுலசூரிய செய்திருந்தார்.

தமிழ்மிரருக்கு இவர் வழங்கிய நேர்காணலின் முழுவிவரங்கள் வருமாறு:

கேள்வி: எப்படி டயகம சிறுமி ரிஷாட்டின் வீட்டுக்கு வேலை செய்ய வந்தார்?

பதில்: பொன்னையா என்கிற 64 வயதுடைய தரகர் ஊடாகவே சிறுமி, ரிஷாட் வீட்டுக்கு வேலைக்கு அழைத்து வரப்படுகிறார். இதுவொரு பெரிய கதை. பொன்னையாவின் சகோதரி வீட்டில், பொன்னையாவின் மகள் தங்கியிருந்தபோது, சில வருடங்களுக்கு முன்னர், பொன்னையாவுக்குத் தெரியாமல் அவரின் மகளை, வெள்ளவத்தையில் உள்ள ஆசிரியர் ஒருவரின் வீட்டு வேலைக்கு, பொன்னையாவின் சகோதரியின் கணவரான நாகையா அழைத்து வந்துள்ளார்.

இந்த ஆசிரியர், ரிஷாட்டின் பிள்ளைகளுக்கு மேலதிக வகுப்புகளை ரிஷாட்டின் வீட்டுக்குச் சென்று நடத்தி வந்துள்ளார். இந்த ஆசிரியர் தனது வீட்டு வேலைக்கு வந்த பொன்னையாவின் மகளை, ரிஷாட் வீட்டுக்கு வேலைக்கு அனுப்பியுள்ளார். இதன்போதே பொன்னையாவுக்கும் ரிஷாட் வீட்டுக்கும் தொடர்பு ஏற்படுகிறது.

கேள்வி: ரிஷாட் வீட்டுக்கு டயகம சிறுமி எப்போது வந்தார்?

பதில்: சிறுமி எப்போது ரிஷாட் வீட்டுக்கு வந்தார் என்கிற சரியான திகதி தெரியாது என்று பொலிஸார் தெரிவிக்கிறார்கள். ஆனால், கடந்த 2020 நவம்பர் 14ஆம் திகதி, ரிஷாட் வீட்டுக்கு சிறுமி சென்றதாக பொன்னையா கூறுகிறார்.

கேள்வி: இச்சம்பவத்தில் ரிஷாட்டும் அவரது குடும்பத்தாரும் செய்த தவறுகள் என்று எவற்றை சொல்வீர்கள்?

பதில்: சிறுமி ஒருவரை வீட்டு வேலைக்கு எடுத்தது முதலாவது தவறு. சிறுமி தங்குவதற்கு வீட்டின் வெளிபுறத்தில் அறை வழங்கப்பட்டதாக சிறுமியின் தாயார் கூறுகிறார். பெண் பிள்ளை என்று கூடப் பார்க்காமல், அவரின் பாதுகாப்பைப் பொருட்படுத்தாமல், வீட்டுக்கு வெளியில் தனியாக தங்க வைத்துள்ளார்கள்.

சிறுமிக்கு வழங்கப்பட்ட அறையில் யன்னல்கள் இல்லை எனவும், அது ஒரு சிறிய அறை என்றும், சிறுமியின் உடைகளை வைக்க, 'காட்போட்' பெட்டியே வழங்கப்பட்டுள்ளதாக தாயார் கூறுகிறார். சிறுமி தூங்குவதற்கு இருவர் படுத்துக்கொள்ளக் கூடிய இரு தட்டு இரும்புக் கட்டில் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. எதற்காக இருவர் தங்கும் கட்டில் வழங்கப்பட்டது?

அந்த வீட்டில் மற்றோர் ஆண் வேலைக்காரரும் இருந்துள்ளார். அவர் எங்கு தங்கியிருந்தார்? சிறுமியின் அம்மா நான்கு தடவைகள் அவரைப் பார்க்க வந்தும் சிறுமி, ரிஷாட்டின் புத்தளம் வீட்டுக்குச் சென்றுள்ளதாக கூறியிருக்கிறார்கள். எதற்காக சிறுமியை அம்மாவிடம் மறைத்து வைத்திருந்தார்கள்?

சிறுமியுடன் வாரத்துக்கு இருமுறை அதுவும் வெறும் ஐந்து நிமிடங்கள் கூட பேசுவதற்கு இடங்கொடுக்கவில்லை என அம்மா கூறுகிறார். அதுவும் அந்த வீட்டில் இருந்த மற்றோர் ஆண் வேலைக்காரரின் தொலைபேசிக்கே அழைப்பு எடுக்கப்பட்டுள்ளது. இறுதியாக எடுக்கப்பட்ட தொலைபேசி அழைப்பின்போதும் கூட, சிறுமி சரியாகப் பேசுவதற்கு அனுமதிக்கப்படவில்லை.

கேள்வி: சிறுமியின் மரணத்தில் பல்வேறு விடயங்கள் மர்மமாக இருக்கின்றன. அது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?

பதில்: கொழும்பு 07இல் உள்ள ரிஷாட் வீட்டில் மண்ணெண்ணை எப்படி வந்தது. தீக்காயங்களுக்கு உள்ளான சிறுமியின் முகம் முழுவதும் தீக்காயம் ஏற்பட்டுள்ளது. ஆனால், தலையில் தீக்காயங்கள் இல்லை. தற்கொலை செய்துகொள்பவர்கள், தலையில் மண்ணெண்ணையை ஊற்றாமல் கவனமாக, உடல் முழுவதும் ஊற்றிக்கொண்டு பற்றவைத்துக் கொள்வார்களா என சிறுமியின் அம்மா கேள்வி எழுப்புகிறார். மண்ணெண்ணை மகளின் உடலில் ஊற்றி பற்றவைத்து மகளை கொலை செய்துள்ளார்கள் என்று அம்மா கூறுகிறார். அம்மாவின் குற்றச்சாட்டுகளுடன் உடன்படுகிறோம்.

ரிஷாட் வீட்டில் வேலை செய்வதற்குத் தான் வருவதாகவும், தான் அங்கு வந்ததும் நீ வீட்டுக்கு வந்திடலாமெனவும் அம்மா சிறுமியிடம் கூறியிருக்கிறார். ஆனால் "அம்மா நீங்க வராதீங்க" என சிறுமி அம்மாவிடம் கூறியிருக்கிறார்.

எவ்வாறாயினும் ஐந்தாம் திகதி, தான் அங்கு வருவதாக அம்மா சிறுமியிடம் கூறியிருக்கிறார். அப்படியிருக்க மூன்றாம் திகதி எவ்வாறு சிறுமி தற்கொலை செய்துகொள்வார்?

கேள்வி: சிறுமி இறந்து அவர் புதைக்கப்பட்ட பின்னரே, பொலிஸார் விசாரணைகளை ஆரம்பிக்கின்றனர். பொலிஸாரின் விசாரணைகளில் திருப்தியடைய முடியுமா?

பதில்: சிறுமி உயிரிழந்த பின்னர், சிறுமியின் சொந்த ஊருக்குச் சென்ற இரு பொலிஸ் குழுக்கள், சிறுமியின் பழைய காதலர் யாரென தேடுவதாக கூறுகிறார்கள். உயிரிழந்த சிறுமியின் கன்னித்தன்மையை ஆராய்ந்து, நீங்கள் (பொலிஸார்) என்ன செய்யப்போகிறீர்கள்? இதனால் உயிரிழந்த சிறுமியை கேவலப்படுத்துகிறார்கள். சிறுமியின் அம்மா, சகோதரிகளை கேவலப்படுத்தும் செயலே இது. சிறுமியின் சுயகௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும்.

12 நாள்கள் வைத்தியசாலையில் சிறுமி இருந்தார். சிறுமி வாக்குமூலம் வழங்கும் நிலைமையில் இல்லை என பொலிஸார் கூறுகிறார்கள். இச்சம்பவம் தொடர்பில் ஏன் எவரும் அந்த 12 நாள்களுக்குள் கைது செய்யப்படவில்லை? சிறுமி தற்கொலை செய்து கொள்ளப் பயன்படுத்தியதாக ரிஷாட் குடும்பத்தார் கூறும், மண்ணெண்ணை போத்தலை சிறுமியின் அம்மா பார்த்ததாகக் கூறுகிறார். அதில் அரைவாசி மண்ணெண்ணை இருந்ததாகவும் அந்த அம்மா கூறுகிறார்.

அப்படி என்றால், பொலிஸார் விசாரணைகளுக்காக அந்த மண்ணெண்ணை போத்தலை கைப்பற்றியிருக்கவில்லை என்பது தெரியவருகிறது. மற்றொரு பெரிய பிரச்சினை, அரைவாசி மண்ணெண்ணை அந்த போத்தலில் இருந்ததாக அம்மா கூறுகிறார். அரைவாசி மண்ணெண்ணை ஊற்றி பற்ற வைத்துக்கொண்டால், உடலில் இவ்வளவு தீக்காயங்கள் ஏற்படுமா?

கேள்வி: இச்சம்பவத்தில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் எவ்வாறு நடந்துக்கொண்டார்கள்? அவர்களது விசாரணைகளில் திருப்தியடைய முடியுமா?

பதில்: இந்த விடயத்தில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சட்ட அமலாக்கப் பிரிவின் செயற்பாடுகள் வெட்கத்துக்குரியன. இவர்களுக்குக் கிடைக்கும் எந்தவொரு முறைப்பாடுகளையும் முறையாக இவர்கள் விசாரிப்பதில்லை.

இந்த விவகாரத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சட்டஅமுலாக்கப் பிரிவின் பணிப்பாளர், 16 வயது நிறைவடைந்ததன் பின்னரே சிறுமி ரிஷாட் வீட்டுக்கு வேலைக்கு வந்துள்ளதாக கூறியுள்ளார். ஆனால் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன, 16 வயதுக்குக் குறைந்த சிறுமியே ரிஷாட் வீட்டில் வேலை செய்துள்ளார் என்கிறார்.

அப்படியானால் அஜித் ரோஹனவை தே.சி.பா. அதிகார சபையின் சட்ட அமலாக்கப் பிரிவின் பணிப்பாளர் சவாலுக்கு உட்படுத்துகிறாரா? குற்றவாளிகளை பாதுகாக்க இவர்கள் முயற்சிக்கிறார்களா? பொறுப்பான அதிகாரி ஒருவர், ஊடகங்கள் முன்பாக இவ்வாறு கருத்துகளை கூறுவது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையை அவமதிக்கிறார்.

கேள்வி: சிறுமி அந்த வீட்டில் வேலை செய்துவந்ததை ரிஷாட்டுக்கு தெரிந்திருக்காதென சமூகவலைத் தளங்களில் கருத்துகள் பகிரப்படுகின்றனவே?

பதில்: சிறுமி ரிஷாட் வீட்டுக்கு வரும்போதும், அந்த வீட்டில் உயிரிழக்கும்போதும் ரிஷாட் பதியுதீன் வீட்டில் இருக்கவில்லை என அவரது சட்டத்தரணி கூறுவதாக செய்தியொன்று வெளியாகிருந்தது. இதே செய்தியில் கடந்த வருடம் கைது செய்யப்பட்டிருந்த ரிஷாட் கடந்த வருடம் டிசெம்பர் 11ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டதாகவும், பின்னர் இந்த வருடம் ஏப்ரல் 21 மாதம் கைது செய்யப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படியாக இருந்தால் கடந்த வருடம் டிசெம்பர் முதல் ஏப்ரல் வரையில் ரிஷாட் வீட்டில் தானே இருந்துள்ளார்.

கேள்வி: சிறுமிக்கு எவ்வளவு சம்பளம் வழங்கப்பட்டுள்ளது?

பதில்: பொன்னையா கூறுவதுபோல சிறுமிக்கு மாதம் 20 ஆயிரம் ரூபாய் சம்பளமாக வழங்கப்பட்டுள்ளது. சிறுமியின் வீட்டாருக்கு மொத்தமாக ஒரு இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் நவம்பர் மாதம் சிறுமி வேலைக்கு சென்றுள்ளதாக கூறுகிறார்கள். அப்படியாக இருந்தால் இந்த வருடம் மே மாதம் வரையில் சம்பளம் வழங்கப்பட்டிருக்குமாக இருந்தால், சிறுமிக்கு ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் தானே வழங்கப்பட்டிருக்க வேண்டும். எதற்காக ஒரு இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது?

சார் (ரிஷாட்) ஏப்ரல் மாதம் கைது செய்யப்பட்டதன் பின்னர் சம்பளம் வழங்கப்படவில்லை என பொன்னையா சொல்கிறார். அப்படியாக இருந்தால் எதற்காக ஒரு இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது?

கேள்வி: சிறுமியின் குடும்பத்தார் செய்த தவறுகள் என்ன?

பதில்: வீட்டு வறுமையைக் காரணங்காட்டி சிறுமியை வேலைக்கு அனுப்பியது தவறு. இதுபோன்று பலர் பெருந்தோட்டங்களில் இருந்து வீட்டு வேலைக்கு செல்கிறார்கள். பெருந்தோட்டங்களில் உள்ள பெண்களுக்கு சுயதொழிலைக் கற்றுக்கொடுக்க வேண்டும்.



ப்ரனிதா வர்ணகுலசூரிய

---

எழுதுகோல்கள் சமூகங்களை

# பிணைக்கின்றனவா? பிளக்கின்றனவா?



ப.பிறின்சியா டிக்சி
p.p.dixci@gmail.com

ஓர் எழுதுகோலும் காகிதமும் எவ்வளவு சிக்கலான விடயத்துக்கும் தீர்வு காணும் வல்லமையுடையது. அதுவும் ஓர் ஊடகவியலாளர் கையில் இருக்கும் எழுதுகோல், கடிவாளங்கள் எதுவுமின்றிக் கட்டவிழ்த்து ஓடும். இந்த ஓட்ட வேகத்தால் ஏற்படுத்தப்படும் தாக்கங்களை அவர்கள் நின்று கவனிக்கின்றார்களா என்றால் அது கேள்விக்குறியே.

இன்றைய காலகட்டத்தில் சமூக மாற்றங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் முக்கிய நபர்களில், ஊடகவியலாளர்களின் பங்கும் இன்றியமையாதது. சமூகத்துக்குள் மறைந்து நடக்கும் பல விடயங்களை வெளிக்கொண்டு வருபவர்களாகவும் அக்கிரமங்களைத் தட்டிக்கேட்பவர்களாகவும் அவர்கள் உள்ளனர்.

தற்காலத்தில் அத்துமீறிய குடியேற்றங்கள், மணல் கொள்ளை, சிறுவர் துஷ்பிரயோகங்கள், பல்வேறு முறைகேடுகள், குற்றச்சாட்டுகள், அறிக்கைகள் பலவற்றை பொதுமக்கள் அறியச் செய்துள்ளனர்.

இவ்வாறு பொறுப்பு வாய்ந்த பணிகளைச் செய்துகொண்டிருக்கும் அவர்கள், சமூகங்களின் சமத்துவம், நல்லிணக்கம் குறித்தும் சிந்தித்துச் செயற்பட வேண்டியது கட்டாயமாகின்றது. சமூகங்களுக்குள் என்ன நடந்தால் நமக்கென்ன, நாம் கூறுவதைக் கூறிச் செல்வோம் என்ற எண்ண ஓட்டத்தில் இருக்கலாகாது.


இந்தச் சமத்துவம், நல்லிணக்கம் என்று சொற்பதங்கள், உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்த ஓரிரு வருடங்கள் பரவலாக உச்சரிக்கப்பட்டன. எனினும், தற்காலத்திலும் அதன் அவசியம் உணரப்படுகின்றது.


குறிப்பாக, தற்காலத்திலும் வடக்கில் நடக்கும் சில விடயங்கள் குறித்து தெற்கு மக்களும் தெற்கில் நடக்கும் விடயங்கள் குறித்து வடக்கு மக்களும் மாறுபட்ட மனப்பாங்கிலேயே உள்ளனர். இதற்குத் தீர்வு காணும் சிறு முயற்சியை, இலங்கை இளம் ஊடகவியலாளர்களின் சங்கம் இவ்வாரம் முன்னெடுத்திருந்தது.

அதாவது, தெற்கில் இடம்பெறும் சம்பவங்கள் வடக்கிலும், வடக்கில் இடம்பெறும் சம்பவங்கள் தெற்கிலும் சரியான புரிதல் இல்லாமையால் திரிவு படுத்தப்பட்டே பரிமாற்றப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றன.

வடக்கின் பிரச்சினைகள் தொடர்பில் தெற்கு மக்களுக்குப் போதுமான தெளிவு இல்லாத அதே நேரம், தெற்கின் பிரச்சினைகள் தொடர்பில் வடக்கு மக்களுக்குப் போதிய தெளிவு இல்லை. தெற்கின் ஊடகவியலாளர்களுக்கு வடக்கு அரசியல்வாதிகளுடன் தொடர்புகொள்வதற்கான சந்தர்ப்பம் மிகவும் குறைந்தளவிலேயே காணப்படுகிறது. அதேபோல, வடக்கின் ஊடகவியலாளர்களுக்கும் தெற்கின் அரசியல் பிரமுகர்களுடன் தொடர்புகொள்வதற்கான சந்தர்ப்பம் மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுகிறது.

எனவே, வடக்கின் ஊடகவியலாளர்களுக்கு தெற்கின் ஊடகவியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மதத் தலைவர்கள் உள்ளிட்டோருடன் தொடர்புகொள்ளவும், தெற்கின் ஊடகவியலாளர்களுக்கு வடக்கு அரசியல்வாதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் மதத் தலைவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தவும் இரு வேலைத்திட்டங்களை இலங்கை இளம் ஊடகவியலாளர்களின் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது.





இதில் வடக்கின் ஊடகவியலாளர்களுக்கு, தெற்கின் அரசியல்வாதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மதத் தலைவர்களுடன் தொடர்ப்புபடுவதற்கான சந்தர்ப்பத்தை அளிக்கும் செயற்றிட்டம், கடந்த 21ஆம் மற்றும் 22ஆம் திகதிகளிலும் நேற்றும் (23) சூம் தொழில்நுட்பம் ஊடாக முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, முதலில் குறித்த அரசியல் பிரமுகருக்கோ, சிவில் சமூக செயற்பாட்டாளருக்கோ தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்ப்பில் கருத்துகளை முன்வைக்க 20 நிமிடங்கள் வழங்கப்பட்டன. அதன் பின்னர் குறித்த அரசியல் பிரமுகர்களிடமும், சமூக செயற்பாட்டாளர்களிடமும் வடக்கின் ஊடகவியலாளர்கள் கேள்விகளைத் தொடுத்து, பதில்களைப் பெற்றுக்கொண்டனர்.

இச்செயற்றிட்டத்தில், தேர்தல்கள் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் மற்றும் எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய, ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க, கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.காதர் மஸ்தான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன், முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய, முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், சமூக செயற்பாட்டாளரும் வேலையில்லா பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டாளருமான தென்னே ஞானாநந்த தேரர், டொக்டர் ஆனந்த விஜேவிக்ரமா, முனீர் முலப்பர் மௌலவி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இச்செயற்றிட்டத்தில் கலந்துகொண்டு அரசியல்வாதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் மதத் தலைவர்கள் அனைவருமே, சமூக மாற்றத்தில் ஊடகவியலாளர்களின் பொறுப்புகளை எடுத்தியம்பினர்.

இதில் பங்குபற்றியிருந்த சிறீதரன் எம்.பி, "தெற்கிலுள்ள ஊடகவியலாளர்கள் பலர் யதார்த்தமாக தர்மத்தின் வழியிலே தங்களுடைய செய்திகளைக் வெளிக் கொண்டு வருகின்றனர். அவர்கள் இல்லாவிட்டால், எங்களுடைய சில விடயங்கள் கூட வெளியில் வந்திருக்காது" எனக் கூறினார்.

அத்தோடு, தெற்கிலுள்ள சில ஊடகவியலாளர்களிடம் மாறுபட்ட எண்ணங்கள், கருத்துகள் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியதுடன், ஆனால் அவ்வாறான எண்ணங்கள், கருத்துகளுக்கு அப்பால், தமிழ் மக்களின் உண்மையான பிரச்சினைகளை வெளிக்கொண்டு வருமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

"யாழ்ப்பாணம், வன்னி, கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளுக்கு நீங்கள் வாருங்கள்; நாங்கள் கூட்டிச் செல்கின்றோம். அம்மக்களின் பிரச்சினைகளை அவர்களிடமே கேட்டறிந்து உண்மைகளை வெளிப்படுத்துங்கள்" என்றார்.

தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இணைந்து கரங்களை இறுகப்பற்றிக் கொண்டால்தான், இந்த நாட்டை பொருளாதார ரீதியாக வளப்படுத்த முடியும் எனவும் அதற்கு ஊடகவியலாளர்கள் இணைப்புப் பாலமாக செயற்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

அதேவேளை, இச்செயற்றிட்டத்தில் பங்குபற்றியிருந்த தேர்தல்கள் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் மற்றும் எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவின் கருத்துகளும் சுட்டிக்காட்டத்தக்கன. அதாவது, ஊடகவியலாளர்கள் மிகவும் காத்தரமான பங்களிப்புகளை வழங்குகின்றார்கள் எனவும் மக்களுடைய பிரச்சினைகளை வெளிக் கொண்டு வரும் தூணாக ஊடாகவியலாளர்கள் காணப்படுகின்றார்கள் எனவும் அவர் எடுத்துரைத்தார்.

மேலும், "ஊடகவியலாளர்கள் வெறுமனே அறிக்கையாளர்கள் மாத்திரம் அல்லாமல் அவர்களுக்கு பல விடயங்களை ஆராய வேண்டிய பொறுப்புக் காணப்படுகின்றது.

"கொச்சிக்கடை, கட்டுவாப்பிட்டிய, மட்டக்களப்பு, மினுவாங்கொடை, நிக்கவரட்டிய போன்ற இடங்களில் ஏற்பட்ட சம்பவங்களின் வேதனை எமக்கும் ஏற்பட வேண்டும். இவ்வாறான சம்பவங்களை அறிக்கையிடல் மாத்திரமின்றி, பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வு ரீதியாகவும் செயற்படல் வேண்டும்.

"அனைவரும் சிந்துவது ஒரே மாதிரியான இரத்தம் என்பதை கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். எனவே, ஊடகவியலாளர்கள் அன்பு, கருணை, யதார்த்த பண்பு கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும்" என்றார்.

இவ்வாறு இச்செயற்றிட்டத்தில் பங்குபற்றிய அனைவரும் ஊடகவியலாளர்களின் சமூகப் பொறுப்புகள் குறித்து எடுத்துரைத்தனர். வடக்கு, தெற்கு மக்கள் மன ரீதியாக இணைவதற்கு ஊடகவியலாளர்கள் ஓர் உறவுப் பாலமாக இருக்க வேண்டுமெனவும் வலியுறுத்தினர்.

ஊடகவியலாளர்களுக்குத் தடையை ஏற்படுத்த முடியாத ஒரு கருவியாகவே எழுதுகோல் உள்ளது. எனவே, அந்தக் கருவியை இவ்வாறான சமூகத்தின் நல்லிணக்கத்துக்குப் பயன்படுத்துவது சாலச் சிறந்ததே.

இதற்காக இலங்கை இளம் ஊடகவியலாளர்களின் சங்கத்தின் இந்த ஆரம்ப முயற்சி, அதற்கு வழியமைத்துக் கொடுத்துள்ளது என்பது நிச்சயம்.

# கருக்கப்படும் மொட்டுகள்





மகேஸ்வரி விஜயனந்தன்

மகள்களைப் பெற்ற அப்பாக்களுக்கு மாத்திரமே தெரியும் முத்தம் காமத்தில் சேர்ந்ததன்று' என்று மறைந்த பாடலாசிரியர் நா. முத்துக்குமாரின் பாடல் வரிகள் எவ்வளவு அழகாக, காத்திரமாக தந்தைக்கும் மகளுக்கும் இருக்கும் உறவுப் பிணைப்பை ஆழமாக உணர்த்தினாலும் இன்றைய சூழலில் இந்த வரிகள் பொய்ப்பிக்கப்பட்டு வருகின்றன.

காம வெறி பிடித்தால் கட்டியவள், பெற்றவள், தம் இரத்தத்தில் உருவானவள், உடன் பிறந்தவள் அனைவரையும் காமப் பார்வையுடன் பார்க்கும் சில காமவெறியர்கள் வாழும் கலிகாலத்தில் நாமும் பெண்ணுரிமை, சிறுவர் உரிமை என என்னதான் குரல் கொடுத்துதாலும், சிறுமிகள் மீதான பாலியல் கொடுமைகள் குறைவில்லாமல் அரங்கேறிக்கொண்டு தான் இருக்கின்றன.

தந்தைக்கும் மகளுக்கும் இருக்கும் உறவென்பது புனிதமானதொன்று! ஒரு குறிப்பிட்ட வயது வரை மாத்திரமே தாய் - மகள் உறவு நல்ல நட்பாகக் காணப்படும். ஆனால், தந்தை-மகள் இடையிலான உறவைச் சிறந்த முறையில் அனுபவிப்பவர்களுக்குத் தான், அதன் அன்பும் பிணைப்பும் புரியும். மகள்களுக்கு தன் தந்தையே முதல் கதாநாயகன்; அவரே தன்னம்பிக்கையின் ஊற்றாகப் பெண் பிள்ளைகளுக்கு விளங்குகின்றார்.

ஆனால், இந்த உன்னத உறவு, அண்மைக்காலமாக அருவருக்கத்தக்கதான அவலங்களாக எமது நாட்டில் அரங்கேறி வருகின்றது.

இன்று, இந்தச் சமூகத்தில் 'வேலியே பயிரை மேய்வது போல', பெற்ற தந்தையே தனது காம இச்சைகளைத் தான் பெற்றவளிடம் பூர்த்தி செய்யுமளவுக்கு, எமது சமூகம் கலாசார சீரழிவின் உச்சத்தில் இருக்கின்றது. பெற்றவனே, தான் பெற்றவளைச் சீரழிக்கும் சம்பவங்கள் எங்கோ, எப்போதோ நமது நாட்டில் ஏதாவது ஒரு மூலையில் நடந்தேறிய நிலை மாறி, இன்று தினமும் இடம்பெறுகின்றன.

இன்னும் கூறப்போனால், கொரோனா முடக்கம், இந்தக் காமவெறியர்களுக்கு நல்லதொரு வாய்ப்பாக மாறியுள்ளது. கொரோனா முடக்கத்தால் வீடுகளில் முடங்கியிருக்கும் தந்தை என்ற அந்தஸ்துக்குரிய சிலர், தனது பெண் பிள்ளைகளை, பருவமடையும் முன்னரே, பாலியல் ரீதியாகச் சிதைத்து விடுகிறார்கள்.

இந்தக் கொடுமைகள் கொரோனாவுக்கு முன்னரும் அரங்கேறியுள்ளன. பெண் சிசுக்கள் கூட, காம வெறியர்களால் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவங்களும், எமது நாட்டில் இடம்பெற்றதை யாரும் எளிதில் மறந்துவிட முடியாது.

இவ்வாறான சம்பவங்களின் பின்னணி என்ன? ஒன்று, தாய் குடும்பத்திலிருந்து பிரிந்து சென்றிருக்க வேண்டும். அல்லது, பெற்றவனை நம்பி, குடும்ப சுமையை இறக்கி வைப்பதற்காக தாய் வெளிநாட்டுக்குச் சென்றிருக்கலாம்; கொழும்பு போன்ற நகரங்களுக்கு வீட்டுத் தொழிலுக்குச் சென்றிருக்கலாம். அல்லது, மனைவியின் இரண்டாவது கணவனாக இருக்கலாம். இவ்வாறான பின்னணிகளில், வீட்டில் தனித்திருக்கும் தனது மகளையே, மனைவியாகப் பயன்படுத்தும் காமுகன்கள் உருவாகின்றார்கள். ஆனால், தாய் அருகிலிருந்தும் தனது இரு பெண் பிள்ளைகளையும் தந்தையொருவன் கர்ப்பமாக்கிய சம்பவம் கடந்த வாரம் பதுளை, தெமோதர தோட்டத்தில் பதிவாகியுள்ளது.

13, 15 வயதுகளையுடைய மகள்களுடன் தாய், தந்தை என நால்வரங்கிய குடும்பத்தில் இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது. மகள்கள் இருவருக்கும் ஒரே நேரத்தில் வயிற்று வலி வந்ததால், அவர்களை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற தாய்க்கு காத்திருந்தது பேரிடி. ஆம்! அவர்கள் இருவரும் கர்ப்பிணிகள் என வைத்தியர்கள் அறிவித்த நிலையில், இந்தக் கர்ப்பத்துக்கு காரணம் யார் எனப் பார்க்கும் போது, அந்தப் பிள்ளைகளை பெற்ற 'மகராசனே' காரணமாயிருக்கிறான். இங்கு பல கேள்விகளுக்கு இடமுள்ளது.

தாய் அறியாமல், இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்குமா? தாயே அதற்கான வழியை ஏற்படுத்திகொடுத்தாளா? தந்தையால் துஷ்பிரயோகத்துக்கு ஆளானதை வெளியே கூற முடியாத அளவுக்கு, அந்தப் பிள்ளைகள் முட்டாள்களா, ஊமைகளா? இது பற்றி யாரிடம் சரி, அந்தப் பிளைளைகள் கூறியிருக்கலாம். அல்லது, அவர்களது விருப்பத்தை மீறி தந்தை தொடும் போது, கூச்சலிட்டு ஊரைக் கூட்டியிருக்கலாம். ஆனால், இப்படி எதுவுமே நடக்கவில்லை. இறுதியில், அந்த சகோதரிகள் இருவரும் தந்தையின் குழந்தையை வயிற்றில் சுமக்கிறார்கள்.

இதேபோன்ற மற்றுமொரு சம்பவம், நாவலப்பிட்டியில் பதிவாகியது. அதாவது, 13 வயது சிறுமியொருவர் பல வருடங்களாகப் பலரால் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு, ஐவர் கைதுசெய்யப்பட்ட நிலையில், இதில் முதலாவது சந்தேகநபராக, அந்தப் பிள்ளையின் தந்தை அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்.

அதாவது, அச்சிறுமி 10 வயதாக இருக்கும் போது, அவளது தாய் பிரசவத்துக்காக வைத்தியசாலைக்குச் சென்ற வேளை, அச்சிறுமியின் தந்தை, தனது மகளை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கியுள்ளான். இது குறித்து, அந்த குழந்தை தனது தாயிடம் அறிவித்ததா? தாய்க்கு இது தெரிந்தும், அந்தத் தாய் மூடி மறைத்துவிட்டாளோ என்பதை நாமறியோம். ஆனால், பத்து வயதில் கருகிய இவள் தொடர்ச்சியாக, 13 வயது வரை பலரால், பல பொழுதுகள் சீரழிக்கப்பட்டுள்ளாள். ஒரு வேளை, இந்தச் சிறுமியும் இதற்கு அடிமையாகியிருக்கலாம். தனக்கு ஒரு பிரச்சினை என்றால், பெற்றவர்களிடேமே எந்தவொரு பிள்ளையும் முதலில் கூறும். ஆனால் ,பெற்றவர்களே தன் வாழ்க்கையில் விளையாடி விட்டதால், அவர்களிடம் கூறி என்ன பயன் என நினைத்து, காமுகர்களின் பசிக்கு இரையாகி வந்திருக்கலாம்.

இவ்வாறான சம்பவங்கள் எல்லாம், மிகமிக அண்மைக் காலமாகத்தான் வெளிச்சத்துக்கு வரத் தொடங்கியுள்ளன. இதற்கான அடிப்படை சம்பவம், 15 வயது சிறுமியொருவர் இணையத்தளம் ஊடாகப் பாலியல் தொழிலுக்காக விற்பனை செய்யப்பட்ட சம்பவம், ஊடகங்களில் பரவலாகப் பேசப்பட்டு, பல முக்கிய புள்ளிகள் கைதுசெய்யப்பட்ட பின்னரே, பல சிறுமியர்கள் பெற்றவர்களாலும், உடன் பிறப்புகளாலும், பாதுகாவலர்களாலும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவங்கள் வெளியே வரத் தொடங்கியுள்ளன.

எனவே, தெரிந்தவரை ஓரிரண்டு சம்பவங்கள். தெரியாமல் இன்னும் எத்தனை மொட்டுகள் பூவாக மலரும் முன்னே கிள்ளி எரியப்பட்டுள்ளனவோ தெரியவில்லை. இவ்வாறான சம்பவங்களில் நூறில் இரண்டு சதவீதம் மாத்திரமே பகிரங்கப்படுத்தப்படுவதாகவும் ஏனையவை குடும்ப கௌரவம் உள்ளிட்ட இன்னோரன்ன காரணங்களால் மூடி மறைக்கப்படுவதாக, பால் நிலை சமத்துவம் மற்றும் முரண்பாட்டு நிபுணர் வீரசிங்கம் தெரிவித்தார்.

இத்தகைய அவலங்களுக்கு அறிந்தோ அறியாமலோ, அனைவரும் காரணமாகி விடுகின்றனர். அதாவது, இப்போதைய தவறான உணவுப் பழக்கவழக்கங்களால் 10 வயது சிறுமி கூட, 15 வயது சிறுமியைப் போன்ற உடல்வாகுத் தோற்றத்துடன் காணப்படுகின்றாள். அது மாத்திரமின்றி, கலாசாரம் என்ற பெயரில் சிறுமியாக இருந்தாலும் அவள் பெண், பாதுகாக்க வேண்டியவள் என்பதை மறந்து, நவநாகரிக ஆடைகள் என்ற பெயரில் ஆங்காங்கே அங்கங்களை காட்டும் ஆடைகளை, தனது பிள்ளைகளுக்கு அணிவித்து அழகு பார்க்கின்றார்கள். இது, இரை கிடைக்காதா என ஏங்கும் கழுகுகளுக்கு, எவ்வளவு வாய்ப்பாகப் போய்விடும் என்பதை எல்லாம் நடந்து முடிந்த பின்பே யோசிப்போம்.

இந்த 21ஆம் நூற்றாண்டிலும் சிறுமிகளைப் பொத்திப் பாதுகாத்து வைத்துத் தான் வளர்க்க வேண்டுமா? என ஆவேசப்படுபவர்களும் இருக்கிறார்கள். சேலை முள் மீது விழுந்தாலும் முள் சேலை மீது விழுந்தாலும் சேதம் என்னவோ சேலைக்கு தான் என்பதை உணர்ந்தால் சரி!

சிறுமியர் மட்டும் தானா, பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகின்றனர் எனக் கேட்டால், இல்லை! இன்று ஆண்பிள்ளைகள் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாகி வருகின்றமை இலங்கையில் அதிகரித்து வருகின்றது.

குறிப்பாக, அடைக்கலம் கொடுப்பவர்களே ஆண்குழந்தைகளைப் பாலியல் ரீதியாக துன்புறுத்துகின்றனர்.

இவ்வாறு, சிறுவயதில் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் சிறுவர்கள், தமது விடலைப் பருவத்தில் தாம் அனுபவித்த துன்பங்களை விடப் பல மடங்கு துன்பங்களை அதிலும் பாலியல் ரீதியான துன்பங்களை, பலருக்கு ஏற்படுத்துகின்றமை தெரியவந்துள்ளது.

எனவே, இவ்வாறான சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்துவதற்கு, சிறுமிகளை இது தொடர்பில் தெளிவுபடுத்த, சிறுவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த மாணவர்களுக்கு பாலியல் கல்வியின் அவசியம் தற்போது உணரப்பட்டாலும், அதனை கற்பிப்பவர் யாரென்ற கேள்வி எழுகின்றது.

ஆனால், பாலியல் கல்வி என்பது, இப்போதைய சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் மிக மிக அத்தியாவசியமாக அமையும் அதேவேளை, இவ்வாறான குற்றங்களுக்கு எதிரான தண்டனைகள் கடுமையாக்கப்பட வேண்டும். அத்துடன், அது நடைமுறைப்படுத்தப்படவும் வேண்டும். இதன்மூலம் பல மொட்டுகள் கருக்கப்படாமல் பாதுகாக்கப்படுவது உறுதி.





# வினை விதைத்தவன்



இளங்கோ பாரதி

இன்றைய உலகில் கூகுளுக்குப் பிறகு அதிகமானோர் பயன்படுத்தும் தளமாக மாறியிருக்கிறது யூடியூப். உலகில் யூடியூப்பின் மிகப் பெரிய சந்தையாக விளங்கும் இந்தியாவில், பல யூடியூப் அலைவரிசைகள் கோடிக்கணக்கான பார்வையாளர்களைப் பெறும் அளவுக்குப் பிரமாண்டமான வளர்ச்சியைப் பெற்றிருக்கின்றன. இங்கு, இந்தி மொழிக்கு அடுத்ததாக யூடியூப்பில் அதிக உள்ளடக்க வீடியோக்களைக் கொண்டுள்ள மொழியாகத் தமிழே உள்ளது. இச்சூழலில் தான் யூடியூப்பரின் குற்றங்கள் வெளியுலகிற்குத் தெரிய வருகின்றன.

சமீப காலமாகத் தமிழ் நாட்டு ஊடகங்களில் தலைப்புச் செய்தியாக மாறியவர் யூடியூப்பர் மதன். தமிழகத்தின் சேலத்தைப் பூர்வீகமாகக் கொண்டு, பின்னர் சென்னை வாசியாக மாறிய இவர் ( வயது 29, பொறியியல் துறையில் கற்றவர்), சிறுவர்கள் அதிகம் விரும்பி விளையாடும் 'பப்ஜி' போன்ற விளையாட்டுகளின் நுட்பத்தை ' 'டாக்சிக் மதன் 18+' என்னும் யூடியூப் சேனலைத் தொடங்கி நிகழ்நிலை (Online ) வழியூடாகச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

'பப்ஜி' விளையாட்டைத் திறமையாக விளையாடும் இவர், நிகழ் நிலையில் விளையாட்டை விளையாடும்போதே அதை எவ்வாறு வெற்றி கொள்வது என்பது குறித்து ஆலோசனை வழங்கி வந்தார். பதின்ம வயதினரான இளையோரே இவரது யூடியூப் சேனலைப் பின்பற்றுவோராக இருந்தனர். கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக, ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, வீடுகளில் முடக்கப்பட்ட இவர்கள் வீடுகளில் இருந்து நிகழ்நிலை வகுப்புகளில் கற்கும் நிலை உருவாகியது.

அலைபேசியைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்ட மாணவர்களில் சிலரும், வசதி படைத்த வீட்டுப் பிள்ளைகளுமே பப்ஜி மதனின் யூடியூப் சேனலின் சந்தாதாரர்கள். இவர்கள் மதனின் யூடியூப் சேனலைப் பார்க்கத் தொடங்கியதோடு நில்லாமல் தமது பாடசாலை , கல்லூரித் தோழர்களையும் இணைத்துக் கொண்டதால் மதனின் வருமானம் பெருகியது.

அவரின் யூடியூப் சேனலைப் பின்பற்றுவோர் அதிகமாக 7,8 இலட்சம் பார்வையாளர்கள் இணைந்தனர். இதனால் மாதம் எட்டு இலட்சம் முதல் பத்து இலட்சம்வரை பணம் சம்பாதித்தார். இதனால் அவரது அத்துமீறல் அதிகரித்தது. வலைத்தளங்கள் குறித்த பெற்றோர்களின் அறியாமை, பிள்ளைகள் படிக்கிறார்கள் என்ற பெற்றோரின் நம்பிக்கையை திசை மாற்றித் தனது பணம் சம்பாதிக்கும் முயற்சிக்குப் பயன்படுத்திக் கொண்டார் மதன்.

சமூக அக்கறை குறித்த சிந்தனை வளராத பால்யப் பருவம், வாலிபப் பருவம் இடையே குழப்ப மனநிலையிலும் ஆர்வ மனநிலையிலும் உள்ள இத்தகைய இளம் பருவத்தினரைத் தனது பேச்சால் வளைத்துப் போட்ட மதன், இதன்மூலம் இளம் தலைமுறையினரை வன்முறை எண்ணம் கொண்டோராகவும் சமூக அக்கறை எதுவும் இல்லாதவர்களாகவும் மாற்றினார்.

வளர்கின்ற பருவத்தில் இளம் பருவத்தினர் தவறாக வழிநடத்தப்பட்டால் அது அவர்களது குடும்பத்தையும் தாண்டி சமுதாயத்தையும் பாதிக்கும். அதிலும், 'பப்ஜி கேம்' போன்றவை முதலில் வன்முறை எண்ணம் கொண்டவர்களாக அவர்களை மாற்றும். இதன்மூலம், சகிப்புத் தன்மையின்மையும் மற்றவர்களிடம் அன்பு செலுத்துவதே கூடாது என்கிற எண்ணமும் வளரும்; மற்றவர்களது துன்பங்களைக்கண்டு மகிழும் எண்ணம் வளரும். இதனால் வன்முறை எண்ணம் கொண்ட இளம் தலைமுறையினர் வளரவே வாய்ப்புள்ளது என்பதால் 'பப்ஜி கேம்' இந்தியாவில் தடை செய்யப்பட்டது. ஆயினும் அதைக் குறுக்குவழியில் பணம் சம்பாதிக்கும் தமது ஆசைக்குப் பயன்படுத்திக் கொண்டார் மதன்.

மேலும், இவரது வீடியோவில் ஆபாசமாகப் பேசுவதை வழமையாகக் கொண்டிருந்தார். இந்நிலையில் சந்தாதாரரான பெண்ணொருவர், ஆபாசப் பேச்சுகளைக் குறைத்துக் கொள்ளுமாறு கேட்டபோது, அவரைத் திட்டிப் பேசியுள்ளார். தன்னை விமர்சித்தவர்களை நாக்கூசும் வார்த்தைகளால் விமர்சித்துள்ளார். இதை எதேச்சையாகக் கண்ட சமூக ஆர்வலர்கள், இதனைக் கண்டித்தபோது ஆத்திரத்தின் உச்சிக்கே சென்று அவர்களுக்குக் கொலை மிரட்டல் விடுக்க ஆரம்பித்தார்.

இந்நிலையில் எல்லைமீறிய மதனின் யூடியூப் சனலின் மீது ' சைபர் க்ரைம் ' பொலிஸாரிடம் புகார்கள் குவிந்தன. மேலும், மாநிலக் குழந்தைகளுக்கான பாதுகாப்பு அமைப்பு, முதலமைச்சர் தனிப்பிரிவிலும் புகார்கள் கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைக்கு வருமாறு அழைத்தபோது மதன் தலைமறைவானார். பொலிஸார் இவரின் அலைபேசி எண்ணை 'ட்ராக்' செய்தபோது, நவீன தொழில்நுட்பம் மூலம் அவர்களைக் கண்காணிக்க முடியாத அளவுக்குச் செய்தார்.

இவரது மனைவி,தந்தை ஆகியோர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் மதனின் சொத்துகள் தொடர்பான பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகின. மதனின் இத்தகைய செயல்களுக்கு மனைவி கிருத்திகாவும் ( வயது 25 , பொறியியல் துறையில் கற்றவர்) துணைபோன செய்தி தெரியவந்தது. மதனின் இத்தகைய செயல்களுக்கு ஆலோசனை வழங்கி, அனைத்து செயல்களுக்கும் மூளையாக விளங்கினார். அவர், கைது செய்யப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டார். எட்டுமாத கைக்குழந்தைக்குத் தாயான இவர், தனது கணவர், நாளொன்றுக்கு 20 மணிநேரம் கடினமாக உழைத்ததாலேயே தங்கள் வங்கிக் கணக்கில் இருப்பு அதிகரித்தது என்பதை ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் வலியுறுத்தினார்.

மதனைக் கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்ட பொலிஸார், இவரது தந்தை மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தர்மபுரியிலுள்ள உறவினர் ஒருவரது வீட்டில் வைத்துக் கைது செய்தனர்.

கைதுசெய்து அழைத்து



வரப்பட்ட மதனின் நிஜத்தோற்றத்தை நம்ப மறுத்தனர், அவரைக் கண்மூடித்தனமாக விரும்பிய இளையோர். தனது தோற்றத்தை நவீன தொழில்நுட்பம் மூலமாக மாற்றியமைத்து, அழகான ஒரு கதாநாயகனாக சித்திரித்திருந்த மதனின் நிஜத்தோற்றம் அவ்வாறில்லை என்பது அவர்களுக்கு ஏமாற்றத்தையே வழங்கியிருந்தது.

பொலிஸாரின் பிடியில் சிக்கிய மதன், அவரது வீட்டிற்கு அழைத்துவரப்பட்டு தனது செயற்பாடுகளை நிகழ்த்திக்காட்டுமாறு கேட்கப்பட்டதுடன் அவர் பயன்படுத்திய கெட்ட வார்த்தைகளையும் சேர்த்துக் கொள்ளுமாறு கேட்கப்பட்டது வேடிக்கை. எனினும் விசாரணைகளுக்கு அவை உதவும் என்பதினாலேயே அவ்வாறு கேட்கப்பட்டார் எனக்கூறப்பட்டது.

ஆரம்பத்தில், உணவகம் ஒன்றை நடத்துவதற்காக வங்கியில் ரூபாய் ஐந்து லட்சம் கடன் பெற்று, அதில் நட்டம் ஏற்படவே, தலைமறைவான மதன் யூடியூப் பக்கம் மூலம் பெற்ற வருமானத்தில் பங்களா, சொகுசு கார்கள், வங்கியில் கணிசமான பணம் என்னும் அளவுக்கு உயர்ந்தார்.

மத்திய குற்றப்பிரிவு பொலிஸாரின் விசாரணையில் மேலும் பல தகவல்கள் வெளியாகியுள்ளன. கூகுள் பே மூலமாக மதன் பலரிடம் பணம் பெற்றிருக்கிறார் என்பதுவும், இவரது மனைவியின் வங்கிக் கணக்கில் நான்கு கோடி ரூபாய் பணம் இருப்பதாகவும், அதற்கு வருமானவரி செலுத்தப்படவில்லை என்பதும் 45 இலட்ச மதிப்பில் ஒரு வீடும் இரண்டு சொகுசு கார்களும் பல இலட்ச ரூபாய் மதிப்பில் தங்க, வைர நகைகள் கையிருப்பில் உள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

மதனின் குற்றச் செயல்கள் இவ்வாறு நீண்டு கொண்டு போனமைக்கு மதனே காரணம் எனக் கூறினாலும், அவரது யூடியூப் சேனலைப் பார்வையிட்டு சந்தாதாரர்களாகிய பதின்ம வயதினரின் பெற்றோருக்கும் கணிசமான பங்குள்ளது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் கற்றலுக்கான வளங்களை தேடிக் கொடுப்பதோடு நின்று விடாது, அவர்களது செயற்பாடுகளை கண்காணிப்பவர்களாகவும் விளங்கவேண்டும். அவ்வாறின்றி பெற்றோர் தம் பிள்ளைகளைக் கண்மூடித்தனமாக நம்பி, தமது பொறுப்பிலிருந்து விலகும் போது மதன் போன்றோரின் அராஜகம் இடையூறின்றித் தொடரும் என்பது வெளிப்படை. எனவே, பெற்றோர் தம் பிள்ளைகள் விடயத்தில் பொறுப்புள்ளவர்களாக நடந்து கொள்ளவேண்டும் என்பது குடும்ப நலனையும் தாண்டி சமூக நலனுக்கு வித்திடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

'வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்ற பழமொழி தற்போது குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைதாகி, சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் மதனுக்கு சாலவும் பொருந்தும் என்றால் அது மிகை இல்லை.



### 18-20 கிலோக்களுக்குள் மறைந்துபோன 1,000 ரூபாய்

# களிப்பின் பின்னரான கசப்பு

## தெரிந்திருந்தால் கொண்டாட்டங்களைத் தவிர்த்திக்கலாம்



திருமதி சதுராஞ்சலி ஹரிஹரன்

“வேண்டாதவற்றை விழுங்குவதை விட சிறந்ததாம் தொண்டையிலேயே வைத்துக்கொள்வது". ஆனால், அதைக்காட்டிலும் சிறந்தது உமிழ்ந்துவிடுவது.

அது போலத்தான் சில குமுறல்களும்; தீர்வு கிடைப்பது நிச்சயமற்றதாக இருந்தாலும் சில விடயங்களை வெளியே கொட்டும்போதுதான் அதைப்பற்றி உரியவர்கள் சிந்திக்கவாவது வாய்ப்பு கிடைக்கும். காலப்போக்கில் தீர்வுகளைக்கூட பெறக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தாலும் கிடைக்கலாம்.

இன்று மலையகப் பகுதிகளில் தொற்றுநோய் பரவலின் மத்தியிலும் போராட்டக்களங்கள் உயிர்பெறுகின்றன. ஒரு சிறிய இடைவெளி; மீண்டும் அதே கோஷங்களும் கொடிகளும்! ஆனால், ஒரே ஒரு வேறுபாடு, முன்வைக்கப்படும் கோரிக்கைகளில் மாத்திரமே!

1,000 ரூபாய் கிடைத்துவிட்டதென வெற்றியை கொண்டாடிய நொடிகளில் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. களிப்பின் பின் மறைந்திருக்கும் நிபந்தனைகளைப்பற்றி மறுக்கப்படும் சலுகைகளும் திணிக்கப்படும் கண்டிப்புகளும் முன்னரே தெரிந்திருந்தால் சிலவேளை கொண்டாட்டங்களுக்கு இடமிருந்திருக்காது.

கட்சிசார் பேதங்களுடனோ அல்லது சாடல்களுடனோ இக்கருத்தை முன்வைக்க நான் முயலவில்லை. இயலாமையின் வெளிப்பாடாய் ஓர் இனத்தின் வேண்டுகோளாய் மாத்திரமே அமைகிறது இக்கட்டுரை.

பெருந்தோட்ட கைத்தொழிலின் முக்கிய அங்கமாகத் திகழும் தேயிலை, இறப்பர் தொழிற்றுறையின் சில பகுதிகள் அரச கூட்டுத்தாபனங்களாலும் பெரும்பகுதி பிராந்திய கம்பெனிகளாலும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. 1992ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தம் மூலம், பெருந் தோட்ட நிர்வாகம் பிராந்திய கம்பெனிகளுக்கு கையளிக்கப்பட்டது.

இதற்கமைய இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை கூட்டு ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டு நாளொன்றுக்கான கூலி தீர்மானிக்கப்படும். ஆண்டுக்கு பின்னர் அரசாங்கமானது சம்பள நிர்ணய விடயத்தில் இருந்து விலகிக் கொண்டது. பின்னர் கம்பெனிகள் தொழிற்சங்கங்களைக்கொண்டு கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் தொழிலாளர்களின் சம்பளத்தை நிர்ணயிக்க ஆரம்பித்தன.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதன அதிகரிப்பு தொடர்பாக மிக நீண்ட காலமாகவே பேசப்பட்டு வருகின்றமை எல்லோரும் அறிந்ததே. அதுமட்டுமல்லாது அது தொடர்பான வரலாற்றின், பல்வேறு சந்தர்ப்பங்களில் போராட்டங்களும் பணிப்பகிஷ்கரிப்பும் இடம்பெற்று வந்துள்ளன. 2014ஆம் ஆண்டு தான் அடிப்படை சம்பளமாக ஆயிரம் ரூபாய் அவசியம் என்ற யோசனை தொழிற்சங்கங்களால் முன்வைக்கப்பட்டன. உற்பத்திக் கொடுப்பனவு, வரவுக்கான கொடுப்பனவு, விலைக்கான கொடுப்பனவு போன்றன கம்பெனிகளுக்கு சாதகமாக அமையவே அடிப்படை சம்பளமாக ஆயிரம் ரூபாய் வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.



தனி மனித வாழ்க்கைச் செலவும் விலைவாசிகளும் அதிகரித்து செல்லவே அடிப்படைத் தேவைகளைக்கூட பூர்த்தி செய்ய முடியாமல், வறுமையை சுவாசிக்கும் ஒவ்வொரு தோட்டத் தொழிலாளியினதும் குறைந்தபட்ச வேண்டுகோளாக ஆயிரம் ரூபாய் சம்பளம் அமைந்தது.

நீண்ட கால போராட்டங்களுக்கு பிறகு கடந்த வருடம் தேர்தல் வாக்குறுதியாக ஆயிரம் ருபாய் சம்பளம் கிடைக்கும் என்ற நம்பிக்கை தரப்பட்டது.

அதன்படி, இந்த வருடம் மார்ச் மாதம் முதல் பெருந்தோட்ட தொழிலார்களுக்கு அடிப்படை சம்பளமாக ஆயிரம் ருபாய் வழங்கப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவித்தார். இன்று அதற்கமைய சில தோட்டங்களில் சம்பளம் வழங்கப்பட்டும் வருகின்றது.

சம்பள நிர்ணய சபையால் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தாலும் அதற்காக பெருந்தோட்ட நிறுவனங்கள் முன்வைத்த நிபந்தனைகள் தொழிற் சங்கங்களையும் தொழிலாளர்களையும் பாதிக்கும் விதமாக அமைந்தது.

மாதமொன்றுக்கு 13 நாள்கள் மாத்திரம் வேலை வழங்கப்படுமெனவும் ஏனைய கொடுப்பனவுகள் சலுகைகளில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுமென்பதோடு கூட்டு ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

இவை எல்லாவற்றையும் கடந்து இன்று பெருந்தோட்ட துறையின் பெரும்பங்கு வகிக்கும் தேயிலை தோட்ட துறையில் உருவாகியுள்ள பிரச்சினைதான் நாளொன்றுக்கான கூலியாக ஆயிரம் ரூபாயை பெறவேண்டுமானால் 18 கிலோ கிராம் தேயிலை கொழுந்துகளை பறித்தாகவேண்டும் என நிர்வாகங்களால் தொழிலாளர்கள் நிர்பந்திக்கப்படுவது. மேலும் சில தோட்டங்களில் இது 20 கிலோ கிராமாகவும் காணப்படுகின்றது.

நிறுவனங்களால் முன்வைக்கப்படும் கட்டுப்பாடுகளையும் நிபந்தனைகளையும் சாத்தியமாக்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளனவா என்பதையே முதலில் ஆராய வேண்டும். சிறுவயது காலத்தில், நான் திரிந்த இடமெல்லாம் வெறும் தேயிலை மலைகள்தான். ஒருவேளை அப்போது இது சாத்தியப்பட்டிருக்கலாம். ஆனால் இன்று நிலைமை அவ்வாறில்லை.

சில தோட்டங்கள் உரிய பராமரிப்பின்றி காடாகிக் கிடக்கின்றன. தேயிலை செடிகள் வளர்க்கப்படும் பரப்பும் குறைவடைந்து காணப்படுகின்றது. இரசாயன பசளைக்கான தட்டுப்பாடு மற்றும் காலநிலையில் உண்டாகும் மாற்றங்களும் தேயிலை செடியின் வளர்ச்சியில் மாற்றத்தை ஏற்படுத்தும். அதிக பனிப்பொழிவு காலங்களில் தேயிலையின் செழிப்பு குறைவடையும்.

தேவையான வருமானத்தைப் பெற முடியாமல் செலவுகளை ஈடு செய்ய முடியாமல் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பலர் தோட்டத் தொழிலைக் கைவிட்டு நகர்ப்பகுதிகளை நாடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சரியான அளவு தேயிலையை உற்பத்தி செய்ய முடியாததால் சில தோட்டங்களில் தொழிற்சாலைகளும் மூடப்பட்டுவிட்டன. இப்படியான பல காரணங்களால் எதிர்பார்க்கும் அதிகளவான கொழுந்துகளை பறிப்பது சாத்தியமற்றதாக அமைகிறது.

ஆனால், ஒரு தோட்டத் தொழிலாளியின் அடிப்படை தேவையும் செலவும் மாத்திரம் இதில் எந்தக் காரணிகளாலும் மாற்றமடையாது என்பதே உண்மை.

சம்பளத்துக்கு அப்பால் ஊழியர் சேமலாப நிதி கொடுப்பனவு, நம்பிக்கை நிதி கொடுப்பனவு, தண்ணீர் வசதி, சுகாதாரம், சலுகை விலையில் தேயிலை, வீடமைப்புத் திட்டங்கள் போன்ற சேமநல வசதிகள் வழங்கப்படுவதாக முதலாளிமார் சம்மேளனம் குறிப்பிட்டாலும் அவைகளின் தரம் தொடர்பாக எப்போதுமே கேள்விகள் எழத்தான் செய்கின்றன.

தொழிலாளர்களின் சார்பில் மாத்திரம் இதைப் பற்றி சிந்திக்காது சிறிது நாட்டு நலன் பற்றியும் சிந்தித்துப் பாருங்கள். கொஞ்சம் கொஞ்சமாக தேயிலை உற்பத்தியும் பராமரிப்பும் குறைந்து வரும் நிலையில் விரக்தியால் பெரும்பாலானோர் தோட்டத் தொழிலைக் கைவிட்டுச் சென்றால் நாட்டின் மொத்த உற்பத்தியிலும் வீழ்ச்சி ஏற்படும்.

எதிர்காலத்தில் நிர்வாகம் செய்ய நிர்வாகிகள் மட்டும் இருந்தால் போதாது தோட்டங்களும் தேவைதானே? ஆகவே இன்றே தோட்டங்களையும் தொழிலாளர்களையும் காப்பாற்ற முன்வாருங்கள். என்ன செய்யவேண்டும் என்பதை ஆராய மலையக அரசியல் பிரதிநிதிகளும் தொழிற்சங்கங்களும் அரசாங்கமும் ஒன்றிணைய வேண்டும். களத்திலிறங்கி ஆய்வுகளை மேற்கொண்டு தேவையான முடிவுகளைப் பெற வேண்டும்.

அப்போதுதான் அவர்களின் போராட்டத்தின் நியாயத்தையும் உங்களால் உணர முடியும். அத்தோடு அதற்கான மாற்று வழிகளையும் பெறமுடியும். வெறுமனே செவ்விகளிலும் நேரலையிலும் ஆதரவையும் கண்டனத்தையும் தெரிவிப்பதால் மாத்திரம் மாறப் போவது எதுவுமில்லை.

பாராமுகமாய் எல்லோருமே இருந்துவிட்டால் நட்டமடையப்போவது எல்லோரும்தான். அவர்கள் தோளில் சுமப்பது வெறும் கூடையை அல்ல; எமது நாட்டின் பொருளாதாரத்தை. நாடு கெட்ட பின்பு, நாம் மட்டும் இருந்து என்ன பயன்? தீர்வுகளை நோக்கி நகரத் தொடங்குங்கள். அன்று தான் எல்லாமும் மாற்றமடையும்! போராட்ட களங்களிலேயே புதைந்துபோக எண்ணாதீர்கள்.

அடிப்படையை வைத்து அடையமுடியாத தூரத்தை சிந்திப்பதன் மூலம் சென்றடையலாம். நாணயத்தின் இரு பக்கங்கள் போல இந்த 18 கிலோ கிராம் பிரச்சினைக்கும் தீர்வுகள் இருக்கத்தான் செய்கின்றன.

ஒன்று, தேயிலை தோட்டங்களின் தரத்தை அதிகரித்து எதிர்பார்க்கும் தேயிலையின் விளைச்சலை இலகுவில் பெறக்கூடியதாய் செய்தல். அல்லது, நாளொன்றுக்கான ஆயிரம் ரூபாய் சம்பளத்திற்காக எடுக்க வேண்டிய கொழுந்தின் அளவை 18 கிலோ கிராமிலிலிருந்து குறைத்தல். இரண்டில் ஒன்றை செயற்படுத்த வேண்டியது அரசாங்கமே; எதிர்பார்ப்பு நம்முடையது.

# வீடுவந்து சேராத வேளாண்மைகள்



எப். முபாரக்



இலங்கை மக்களின் பிரதான விவசாயச் செய்கையாக, நெல் வேளாண்மை காணப்படுகின்றது. இந்நாட்டின் இருபத்தைந்து மாவட்டங்களிலும் வெவ்வேறு வகையான விவசாயச் தொழிற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில், நெல் வேளாண்மைச் செய்கைகள் பிரதானமாகக் காணப்படுகின்றது. இம்மாகாணத்தில், நூற்றுக்கு ஐம்பது சதவீதம் நெல் செய்கை பண்ணப்பட்டு வருகின்றது.

இதிலும் இரண்டு போகங்கள் காணப்படுகின்றன. மழையை நம்பி வேளாண்மை செய்வது பெரும் போகம் எனவும், குளத்து நீரை நம்பிய வேளாண்மை சிறு போகம் எனவும் அழைக்கப்படுகின்றது. பெரும் போகம் பெரும்பாலும் நவம்பர் தொடக்கம் ஏப்ரல் வரையிலும் சிறு போகம் மே தொடக்கம் ஒக்டோம்பர் வரையிலும் மேற்கொள்ளப்படும்.

திருகோணமலை மாவட்டத்தில் பெரும் போகம் 42,642 ஹெக்டேயர் நிலப்பரப்பிலும், சிறுபோகம் 24,256 ஹெக்டேயர் நிலப்பரப்பிலும் செய்கைகள் நடைபெற்று வருகின்றன.

ஒரு விவசாயி, மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் வேளாண்மை செய்கை மேற்கொண்டு அதை அறுவடை செய்ய, சுமார் மூன்று முதல் நான்கு மாதங்கள் ஆகின்றன. இக்காலப்பகுதியில், அந்த விவசாயி பல்வேறு வகையான துயரங்களை அனுபவிக்கின்றான்.

வரம்பு செதுக்குதல் முதல் நெல் அறுவடை வரை பல ரூபாய் செலவு செய்யப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. அறுவடையின் போது கிடைக்கும் இலாபங்களோ மிகக் குறைவாகவே உள்ளது. இதற்குப் பல்வேறு வகையான பௌதீக, அரசியல், இயற்கை காரணங்கள் காரணிகளாக உள்ளன.

### நெல்லுக்கான விலையில் தளம்பல்

தற்போது நாடு முழுவதிலும் சிறுபோக வேளாண்மை செய்கை மேற்கொள்ளப்பட்டு, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, கிளிநொச்சி, மன்னார் போன்ற மாவட்டங்களில் அறுவடை நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இதில் சம்பா, சிவப்பு, பச்சை, கட்டை சிவப்பு போன்ற நெல் வகைகள் காணப்படுகின்றன. இதில் ஒவ்வொன்றுக்கும் அரசாங்கம் வெவ்வேறு வகையான விலைகளை நிர்ணயித்துள்ளது. ஆனால் அரசாங்கம் நிர்ணயித்த விலைகளுக்கு விவசாயிகள் வழங்குவதற்கு முடியாத நிலையில் உள்ளார்கள்.

காரணம், முதலீடுகளைக் கூடுதலாகச்செலவு செய்து, பெற்றுக்கொள்ளும் இலாபமோ மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இதனால் முதலாளிமார்களின் ஆதிக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. பத்து ரூபாவையேனும் அதிகரித்து நெல்லை விவசாயிகளிடமிருந்து சுரண்டுகின்ற தன்மை தற்போது மேலோங்கி காணப்படுகின்றது.

இதில் சில விவசாயிகள், வயல் வேலைக் காலங்களில் வயலில் உழுவதற்கும், வரம்பு கட்டுவதற்கும், நெல் விதைப்பதற்கும், கிருமி நாசினிகளை பெற்றுக்கொள்ளுவதற்கும், பசளை வாங்குவதற்கும், வயல் அறுவடை செய்வதற்கும் என பல இலட்சங்களை, நெல் முதலாளிமார்களிடமே பெற்றுக்கொள்ளுகின்றார்கள். இதனால் அறுவடை செய்கின்ற நெல்லை முதலாளி மார்களுக்கு கூடிய விலைக்கோ, குறைந்த விலைக்கோ வழங்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு விவசாயிகள் தள்ளப்படுகின்றார்கள்.

இந்த அவல நிலை மாற்றியமைக்கப்படல் வேண்டும். விவசாயத்தில் முதலாளிமார்களின் போட்டித்தன்மையை குறைக்க, அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.



### பசளை பிரச்சினைகள்

நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் விவசாயிகள் நாளாந்தம் பதாகைகளைத் தாங்கிய வண்ணம் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றார்கள். பசளையைப் பெற்றுத்தருமாறும்,நெல்லுக்கான உத்தரவாத விலைகளைக் கோரியும், அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராகவும், விவசாயிகளுக்கு சலுகைகளை பெற்றுத்தருமாறும் ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு மாவட்டத்தில் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

செயற்கைப் பசளை வகைகளையும் செயற்கையான கிருமி நாசினி பாவனைகளையும் மேற்கொண்டு பழக்கப்பட்ட விவசாயிகள், திடீர் என இயற்கை உரங்களில் விவசாயம் மேற்கொள்ளுமாறு அரசாங்கம் அறிவித்துள்ளமை, விவசாயத்தைப் பாழாக்கும் செயற்பாடுகள் என விவசாயிகள் தெரிவிக்கின்றார்கள்.

இயற்கையான பசளைக்கு வீட்டுத் தோட்டங்கள், சிறியளவிலான பயிர்ச் செய்கைகளுக்குச் சாத்தியமாகும். ஆனால், ஏக்கர் கணக்கில் வேளாண்மை செய்கைக்கு, இயற்கையான உரப்பயன்பாடு ஒரு போதும் சிறந்ததாக அமையாது என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். விளைச்சல் குறைவு,வேளாண்மை மஞ்சளாக மாறுதல், வளர்ச்சியின்மை, நோய்த்தாக்கங்கள் அதிகரிப்பு, எதிர்பார்க்கின்ற விளைச்சல் கிடைக்காமை போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

இத்திட்டங்களை ஒவ்வொரு போகத்திலும் அரசாங்கம் கொஞ்சம் கொஞ்சமாக விவசாயிகளுக்கு அறிவையும் விவசாயத்துக்கான உரங்களையும் வழங்கினால் மாற்றமுடியும். ஒரேதடவையில் இலங்கையிலுள்ள அனைத்து விவசாயிகளையும் சேதனப் பசளைக்கு மாற்றுவோமாக இருந்தால் தொடர்ந்தும் போர்கொடிகள் தான் உயரும். புதிய நெல் வர்க்கங்களை பெற்றுக்கொள்வதில் சிரமம்:

விவசாயிகள் குறைந்த மாதத்தில் அறுவடை செய்யும் புதிய நெல்லினங்களை பெற்றுக்கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். ஒவ்வொரு மாவட்டங்களிலும் விவசாயத் திணைக்களம், கமநல சேவைகள் நிலையம், விவசாய விரிவாக்கல் நிலையங்கள் என பெயர்பலகைகள் மாத்திரமே காணப்படுகின்றன. தவிர புதிய நெல்லினங்கள் இல்லை; விவசாய அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் தம்புள்ளைக்கு செல்லுமாறு கூறுகின்றார்கள்.

அரசாங்கம் விவசாயிகளுக்கென்று புதிய விவசாயக் கொள்ளையொன்றை வகுத்து வெளியிட வேண்டும். விவசாயிகளின் காலடியில் சென்று நெல் வர்க்கங்களை அறிமுகப்படுத்த வேண்டும். விவசாயிகளுக்கு மானிய உதவுத் திட்டங்களை அறிமுகப்படுத்தத வேண்டியதோடு விவசாயிகளின் கோரிக்கைகளையும் எற்றுக்கொள்ள அரசாங்கம் தயாராக இருக்க வேண்டும்.

அத்தோடு, புதிய நெல் வர்க்கங்களை அறிமுகப்படுத்த நடமாடும் சேவைகளை ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு போகத்திலும் புதிய நெல்லினங்கள், விவசாய இயந்திர தொழில்நுட்பங்களைக் காட்சிப்படுத்தி அறிமுகப்படுத்த வேண்டும்.



### கிருமி நாசினி பாவனை

விவசாயத்துக்கு கிருமி நாசினி பாவனை மிகவும் இன்றியமையாததாக காணப்படுகின்றது. ஒவ்வொரு விவசாயச் செய்கைக்கும் வெவ்வெறு வகையான கிருமி நாசினிகள் தேவைப்படுகின்றன.

வேளாண்மைச் செய்கையில் அரக்கொட்டியான் தாக்கம் நெற்செய்கைக்கு ஏற்படுமாக இருந்தால், அதற்கு எந்தவிதமான கிருமி நாசினியோ மருந்துகளோ செல்வாக்கு செலுத்துவது குறைவு.

கடந்த வருடம் திருகோணமலை மாவட்டத்தில் அறக்கொட்டியான் தாக்கம் வெகுவாக அதிகரித்ததால் அறுவடையில் போது வெறும் பதர்களே காணப்பட்டது. இதற்கு மருந்துகளே இல்லை. நாட்டில் எரிபொருட்கள் டீசல், பெற்றோலுக்கு விலை அதிகரித்ததால் கிருமி நாசினி, பசளைகளும் விலை அதிகரிக்கின்றது. அதேவேளை நெல்லுக்கான விலை அதிகரிக்கவில்லை. அதே நிலை தான் தற்போது காணப்படுகின்றது. விவசாயிகளின் பிரச்சினைகளும் தீர்க்கப்படல் வேண்டும்.

### எடுக்கப்பட வேண்டிய நடவழக்கைகள்

விவசாயிகள் இரவும் பகலும் பனி, குளிர், மழை,வெயில் என்று பராமல் கஷ்டப்படுபவர்களுக்கு அரசாங்கம் காலடியில் சென்று பிரச்சினைகளை இனம் கண்டு தீர்த்து வைக்க முற்பட வேண்டும்.

நாட்டின் அன்னிய செலாவாணியை பெற்றுக் கொள்வதற்கு விவசாயிகள் முதுகெலும்பாக உள்ளனர். அவர்களுக்குச் சிறந்த விளைச்சலையும், சிறந்த இலாபத்தையும் பெற்றுக்கொள்வதற்கான அறிவு, உர வகைகள், கிருமி நாசினிகள், புதிய வர்க்கத்திலான நெல் வகைகளையும் வழங்க வேண்டும்.

அத்தோடு, பாதிப்பில்லாத வகையில் விவசாயிகளிடமிருந்து நெல்லை உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்யமுடியும். இடைதரகர்களின் போட்டித் தன்மை, முதலாளிமார்களின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தி அரசாங்கம் கைக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு மேற்கொள்வதன் மூலம், விவசாயத்துறையில் இன்னும் இளைஞர்கள் விவசாயத்தில் கால்பதித்து, நாட்டை விவசாய பசுமை பொருந்திய தேசமாக மாற்றியமைக்க முடியும்.

# கறுப்பு ஜூலை நாளன்று தோண்டப்பட்ட மற்றுமொரு ‘தமிழ்க்கண்’

தமிழர்களுக்கெதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட பச்சை அராஜங்கள் அரங்கேற்றப்பட்டு நேற்று (ஜூலை 23) ஆம் திகதியுடன் 38 வருடங்கள் கடந்துவிட்டன. அவ்வாறான நாளொன்றிலேயே மற்றுமொரு ‘தமிழ்க்கண்’ பிடுக்கப்பட்டுள்ளது.

1983 ஜூலைக் கலவரத்தின் போது, வெலிக்கடை சிறைச்சாலையில், குட்டிமணி உயிருடன் இருக்கும்போதே, அவருடைய கண்கள் இரண்டும் பிடுங்கியெடுக்கப்பட்டு புத்தனின் காலடியில் போடப்பட்டன என்பது வரலாற்று ஏடுகளில் உள்ளன.

ஆனால், விண்ணப்பத்திலிருந்தே ‘தமிழ்’ பலவந்தமாக பிடுங்கப்பட்ட மற்றுமொரு வரலாற்று துரோகமான நாளாக, 2021 ஜூலை 23 ஐ பதிவிடவேண்டும். கறுப்பு ஜூலைக்கு 37 வயதாகியிருந்த 2020 ஆம் ஆண்டு, பிறப்புச் சான்றிதழில் ‘இனம்’ இல்லாமல் செய்யப்பட்டு ‘இலங்கையர்’ எனப் புகுத்துவதற்கான யோசனை பிரேரிக்கப்பட்டிருந்தது.

அக்காலப்பகுதியில் தென்னிலங்கை சிங்கள கடும்போக்குவாதிகளின் இரத்தத்தை சூடாக்கி, வாக்கு வங்கிகளை நிரப்பிக்கொள்ளும் வகையில், அவ்வாறான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கலாம். ஆனால், கறைபடிந்த வரலாற்று நாளான ஜூலை 23இல், தமிழ்க்கண்ணை பிடுங்கியெடுத்தது ஏன்?

சிங்கள-பௌத்த வாக்குகளால் வெற்றியீட்டிய அரசாங்கமென மார்த்தட்டி கொள்ளும் இவ்வரசாங்கத்தின் செல்வாக்கு, நாளுக்கு நாள் சரிந்துகொண்டே போகிறது. அதனை தக்கவைத்துக் கொள்வதற்காக, சிறுபான்மை இனங்களுக்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுப்பதற்கும், அதனூடாக செல்வாக்கை உயர்த்துகொள்ளும் வகையிலும், தமிழ்க்கண் மீது கையை வைத்திருந்திருக்கலாம்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில், ‘தமிழும் அரசகரும மொழி ஒன்றாதல் வேண்டும்’ என அழுத்தம் திருத்தமாகவே எழுதப்பட்டுள்ளது. வடக்கு-கிழக்கு மாகாணங்களைத் தவிர ஏனைய மாகாணங்களில் அவை பின்பற்றப்படுவதே இல்லை. இந்நிலையில், சமாதான நீதவான் பதவிக்கான விண்ணப்பப்படிவத்தை தமிழ் மொழியில் பூர்த்தி செய்வதற்கான உரிமை மறுக்கப்பட்டுள்ளது. அப்படிவத்தை பூர்த்தி செய்யும்போது, பின்பற்றவேண்டிய அறிவுறுத்தல் வழிகாட்டி, மும்மொழிகளில் இருந்தாலும், விண்ணப்பத்தை சிங்களம் அல்லது ஆங்கில மொழியில் மட்டுமே பூர்த்திச் செய்யவேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்மொழியைப் பாதுகாப்பதற்காக அவ்வப்போது போராடவேண்டிய மிகவும் துர்ப்பாக்கிய நிலைமையொன்று அண்மைய சில மாதங்களில் கண்டோம். தமிழ் இல்லாதொழிக்கப்பட்டு சீன மொழிக்கு அதிமுக்கியத்துவம் கொடுக்கப்பட்டதை கண்ணுற்றோம். ஆக, மொழியுரிமையையும் பாதுகாக்கவேண்டிய இக்கட்டான நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளோம்.

சமாதான நீதவான் விண்ணப்பப்படிவ விவகாரத்துக்கு எதிரணியினர் ஏகோபித்த அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும் என்பதுடன், ஆளும் தரப்புக்குள் இருக்கின்ற தமிழ்பேசும் சிறுபான்மையினர், கடுமையான அழுத்தங்களை அரசாங்கத்துக்கு கொடுக்கவேண்டும். இல்லையேல், இருப்பதையும் இழந்து நிர்வாணகோலத்தில் அலைவது வெகுதொலைவில் இருக்காது.

ஏற்கெனவே, எடுத்தியம்பியதைப் போல, ‘கெஞ்சி கோவணம் கட்டுவதை விட, நிர்வாணமே மேல்’ என்பதை காவடியெடுத்திருக்கும் சிறுபான்மை பங்காளிகள் உணர்ந்துகொள்ளவேண்டும். எல்லாவற்றுக்கும் தலையை அசைத்து, எதற்கெடுத்தாலும் மண்டியிடவே வேண்டுமென்ற நிர்ப்பந்தத்துக்குள் எதிர்கால சந்ததியினரை தள்ளிவிட்டு விடவேண்டாமென இடிந்துரைக்கின்றோம்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

‘நான்’ இல்லாதபோது ஞானம் பிறக்கிறது. ‘நான்’ என்று சொல்லும் போதே அகங்காரத்தின் குரல் மனிதனை அறியாமலே பிறந்து விடுகின்றது.

விழிப்பு நிலையில் உள்ள மகான்கள் மௌனமாக இருப்பார்கள். பேசும் வார்த்தைகளில் தெளிவு முக்கியமானது. பெரும் ஞானிகள் எதனையும் ஆழமாகக் கச்சிதமாக, உண்மையின் வெளிப்பாடாகவே உருவாக்கி உரையாற்றுவார்கள், இதனை உணர்ந்தவர்கள் தங்களைச் செப்பனிடுவார்கள்.

அருள் செறிந்த உரைகள் தூய நெஞ்சினூடாக முகிழ்ப்பதாகும். தன்னை உணர்வதற்குப் பொறுமையுடன் கூடிய பக்தி மிக ஆழமாக அமைதல் வேண்டும்.

நல்ல எண்ணங்களூடாகவே பேசும் வார்த்தைகளின் அழுத்தம் வெளிப்படும். பேசுபவர்களில் பலர் எதனைப் பேசுவது என்றே புரியாமல் இருப்பதுண்டு.

மௌனம் சிந்தனையில் தெளிவை உண்டு பண்ணுவதால், வார்த்தையின் உற்பத்திகளும் தூய்மையின் வடிவத்தைக் காட்டி நிற்கும். நல்லதை மட்டும் இதயத்தில் வரைக.

பருத்தியூர் பால– வயிரவநாதன்

# சோற்றுக்கே வழியில்லையாம்; இயற்கை உரம்?

லஷ்மன்

பெரும் முதலாளிகளின் கைகளில் இருக்கின்ற அனேக இறக்குமதிகளை தற்போதைய அரசாங்கம் தடை செய்து வருகிறது. அதில் முக்கியமானதொன்றுதான் விவசாயத்துக்கான இரசாயன உரம் மற்றும் பூச்சி கொல்லிகளின் இறக்குமதியாகும்.

கொரோனா பரவிக் கொண்டிருக்கையில், கொரோனாவுக்கு மஞ்சள் முக்கியமான தொற்று நீக்கி என்று எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கையில் மஞ்சளின் இறக்குமதி தடை செய்யப்பட்டது. அப்போது அதிகரித்த மஞ்சளின் விலை இன்னும் குறையவில்லை. உழுந்தும் அப்படித்தான். அதற்கிடையில் இன்னும் பல பொருள்களுக்கு இறக்குமதித்தடை வந்திருக்கிறது.

கிழக்கின் முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.சந்திரகாந்தன் இரசாயன உரத்தின் இறக்குமதியாளர்களும் முதலாளிகளுமே இயற்கை உரத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள் என்கிறார். அதே நேரத்தில் கிழக்கின் ஆளுநர் அநுராதா யஹம்பத் விவசாயிகள் விசயத்தில் அரசியல் தலையீடு இருக்கிறது. அதனால்தான் விவசாயிகள் சேதனப்பசளையை எதிர்க்கிறார்கள், போராட்டங்களை நடத்துகிறார்கள் என்று தெரிவித்திருக்கிறார்.

நாட்டின் முக்கிய உற்பத்தித் துறைகளில் ஒன்றான விவசாயத்துறைக்கு முக்கிய தேவையாக இருக்கிற இரசாயனப் பசளையின் இறக்குமதியை தடை செய்துவிட்டு, அரிசியை இறக்குமதி செய்கின்ற நிலை இதற்கு நல்ல உதாரணம்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் கடலில் மூழ்கியதையடுத்து கடலில் இரசாயனம் கலந்துவிட்டது என்று கொடிபிடித்துக் கொண்டிருந்தவர்களை இப்போது காணவில்லை. அது போலவே இந்த இயற்கை உரம், இரசாயன உரம் தொடர்பான பிரச்சினைகளும் காணாமல் போய்விட்டன. சலசலப்பும் சிலுசிலுப்பும் சில நாள்களுக்குத்தான் நிலைமை எல்லாவற்றிலும், எல்லாக்காலங்களிலும் இருக்கின்ற ஒன்றுதான். பெரிய கோடு ஒன்று போடப்பட்டால் சிறிய கோடு மறைந்துவிடப்போகிறது.

இரசாயன உரம் தடை செய்யப்பட்ட எமது நாட்டுக்குள் ஒருதொகை இரசாயன உரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக அண்மையில் செய்திகள் வந்துள்ளன. இந்த உரம் யாருக்கு என்ன விலைகளில் விற்பனை செய்யப்படவுள்ளது என்பது யாருக்கும் தெரியாது. இந்த இறக்குமதித் தடை எல்லோருக்கும் என்றால் ஒருதொகை உரத்தை எதற்காக இறக்குமதி செய்ய வேண்டும். இந்த அனுமதி எல்லோருக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வெளிப்படத் தொடங்கியிருக்கிறது. அந்தவகையில், இரசாயன உரம் துறைமுகத்துக்கு எவ்வாறு வந்தது. இதற்கு அனுமதியளித்தது யார். இதனை இறக்குமதி செய்தது யார் என்பது. இன்றைய நிலைமையில் நாட்டுக்கும் மக்களுக்கும் தெளிவுபடுத்தப்படவேண்டும் என்பதும் கோரிக்கையாக இருக்கிறது.

இரசாயன உர இறக்குமதி தடை செய்யப்பட்டதும் நாட்டில் பல போராட்டங்கள் விவசாயிகளாலும் சில அமைப்புகளாலும் நடத்தப்பட்டன. ஆனால் அவை இப்போது ஓய்ந்து விட்டன. முழு நாட்டுக்கும் பொதுவான பிரச்சினை கொவிட் - 19 காலத்தில் உருவாகியது. அதனால் தனிமைப்படுத்தல் சட்டமும் இதில் பாய்ந்து அடக்கியிருக்கிறது. எதுஎப்படியோ நமது நாட்டில் மக்களுக்கெதிரான பல விடயங்கள் நடந்து முடிவதற்கு இந்த கொவிட் - 19 வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. மக்களின் செயற்பாடு மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறதே தவிர மக்களுக்கெதிரான செயற்பாடுகள் யாவும் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன என்பது மட்டுமே உண்மை.

இயற்கை உரப்பாவனையை அதிகரிப்பதன் மூலமாக செயற்கை உரப்பாவனையைக் குறைப்பதற்கான வழிவகைகளைக் கண்டடையமுயலாமல் எடுத்தோம் கவிழ்த்தோமென நடைமுறைப்படுத்த முனையும் செயற்பாடுகள் எவ்வளவுக்கு வெற்றியளிக்கும் என்று கேள்வி கேட்கப்பட்டாலும் பெரும்பான்மையினரின் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டே தீரும்.

ஆனால், யாரும் இயற்கை உரப்பாவனைக்கு எதிரானவர்களல்ல நடைமுறைப்படுத்தப்படும் விதம் தவறாக இருக்கிறது என்றே எதிர்த்தரப்பு அரசியல்வாதிகள் கருத்து வெளியிடுகின்றன.

நாட்டில் புற்றுநோயால் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. இது விவசாய உற்பத்திகளால் அதிகமாக இருக்கிறது. அது நேரத்தில் ஏனைய மாமிச உணவுகளாலும் ஏற்படுகிறது. மக்கள் யார் சொல்வதையும் முழுமையாகக் கேட்டு ஒழுகுவதில்லை. அதற்குக் காரணம் இன்றைய இயந்திர வாழ்க்கையாகும். எங்கு, எது இலகுவில் கிடைக்கும். குறைந்த செலவில் கூடிய இலாபம். பொருள்கள் என்றே அவர்கள் சிந்திக்கிறார்கள். இது யதார்த்தமே. இந்த ஜதார்த்த சூழலில், விவசாயிகளைப் பொறுத்தவரையில் குறைந்த செலவில் அதிக விளைச்சலைப் பெற்றுவிடவேண்டும் என்றும் சிந்திக்கின்றன.

படிப்படியாக இயற்கை உரத்துக்குச் செல்லல் சாத்தியமில்லை. இயற்கை வளங்கள் சுருங்கிக்கொண்டே செல்லுகின்ற இன்றைய காலத்தில் வளங்களை எவ்வாறு பெருக்குவது சாத்தியமற்றதாகும். விதைப்பு, நீர் பாய்ச்சுதல், அறுவடை போன்றவற்றிலேயே நவீனத்துவமான செயற்பாடுகளை கைக்கொள்ள வேண்டும். இதற்குரிய தொழில்நுட்ப விடயங்களையும், விவசாயிகள் அறிந்து கொள்ள வேண்டும் என்பது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. இந்த எதிர்பார்ப்பு நாட்டு மக்களை ஆரோக்கியமானவர்களாக மாற்றுவதுடன், ஆரோக்கியமான மக்கள் சமுதாயத்தையும் உருவாக்கும்.

ஆனால், விளைச்சலை அதிகரிப்பதற்குத் தேவையானவைகளாக விவசாயிகள் எண்ணும் இரசாயனப்பசளை, எண்ணை வகைகள் இல்லாமல் இது சாத்தியப்படுமா என்பதே கேள்வி.

மானிய அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுவந்த உரம் இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. இரசாயன உரம் வருடத்தின் பெரும்போகம், சிறுபோகம் ஆகிய இரண்டு பவருவங்களிலும் வழங்கப்பட்டிருக்கின்றன. இதனை அரசாங்கமே கமநல சேவை நிலையங்கள் ஊடாக வழங்கிவந்தது. ஆனால் இன்றைய அரசாங்கம் அதனை நிறுத்துகிறது. ஜனாதிபதி எடுத்திருக்கும் இறுக்கமான இந்த முடிவினை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் கட்டாயமாக அமுல்படுத்துபவர்களாக இருப்பார்கள். அதே நேரத்தில் ஏனையவர்களும் ஆதரித்தாலும் அதனால் ஏற்படப்போகும் விளைவு விவசாயிகளுக்கு மாத்திரமல்ல எல்லோருக்குமானது என்பதனை எண்ணிக் கவலை கொள்கிறார்கள்.

நாட்டின் பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்ப வேண்டுமாக இருந்தால் விவசாயத்துறையினை நவீன மயப்படுத்தவேண்டும். முன்னேற்றவேண்டும். அழியும் இயற்கை வளங்களைப் பாதுகாக்கவேண்டும். மக்களுக்கு அறிவு புகட்ட வேண்டும். அதனை விடுத்து மக்களை நெருக்கடிகளுக்குள் தள்ளும் முடிவுகளை மேற்கொள்ளக்கூடாது என்பது எதிரணியினரின் நிலைப்பாடாகும்.

2ஆம் உலக மகா யுத்தத்தின் பின்னர் பாவனைக்கு வந்த இந்த செயற்கை உரம் உலகத்தையே ஆக்கிரமித்திருக்கிறது. அதற்கு முன்னர் எமது மூதாதையர்கள் எவ்வாறு விவசாயம் செய்தார்கள் என்ற கேள்வி நியாயமானதுதான்.

உரிய முறையில் விவசாயம் செய்தால் மண்ணை மலட்டுத்தன்மையிலிருந்து பாதுகாக்கலாம் என மண்ணை நேசிக்கின்ற விவசாயிகள் தெரிவித்தாலும் விதைத்து நீர்பாய்ச்சி வரப்புகட்டி, குருவி, மிருகங்களுக்கு காவல் இருந்து அறுவடை செய்யும்போது தலையில் கையை மட்டும்வைக்கின்ற நிலையே ஏற்படுகிறது.

பெரிய பெரிய முதலாளிமாரும், உரம் இறக்கும் கம்பனிகளும் பலமாக எதிர்க்கின்ற இயற்கை முறை விவசாயத்துக்கு இன்னும் எத்தனை காலம் மக்கள் சிரமப்படப்போகிறார்கள் என்பது கேள்விதான். ஆனாலும் இந்த இயற்கை முறை உரப்பாவனையின் சாதகங்கள் ஆராயப்படவேண்டியவைகள்தான். அத்துடன், இம்முறை விவசாயம் செய்து கொண்டிருக்கின்ற விவசாயிகளுக்கு உரம் வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டை நிவர்த்திக்க உரம் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தாலும் அது முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. என்பதுதான் வெளிப்படை.

இந்த நிலையில்தான் நெல்லின் விலை, அரிசியின் விலை அதிகரிக்காமல் பார்த்துக்கொள்வது , சேதனைப் பசளை பாவனைகளை அமுல்படுத்துவது என்பன அரசாங்கத்திற்குப் பெரும் சவாலாக இருக்கப்போகிறது. இது மறைக்கப்பட்ட உண்மையல்ல. வெளிப்படையே. பொறுத்திருப்போம். விவசாயத்துறை மேம்படட்டும். உணவுப்பஞ்சமும் தீரட்டும்.

## கடிதங்கள்

### தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலைக்கு வைத்தியர் நியமிக்கவும்

தம்பலகாமம் பிரதேசத்தில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மூவினங்களையும் சேர்ந்த சுமார் 35,000 மக்கள் நாளாந்தம் பயனடையும் தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை காணப்படுகிறது.

மூன்று வைத்தியர்கள் பணியாற்ற வேண்டிய இவ்வைத்தியசாலையில் தற்பொழுது ஒரு வைத்தியரே கடமையில் இருக்கிறார். இதனால் வைத்தியசாலையின் செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நாளாந்த மருத்துவ தேவைகளுக்காக, வைத்தியசாலையை நாடிவரும் நோயாளிகளுக்கு இது மிகுந்த சிரமத்தை உண்டுபண்ணுகிறது.

மிக அண்மைக் காலத்திலேயே இரத்த பரிசோதனை வசதி, வைத்திய நிபுணர்களின் சேவை, புதிய வைத்தியசாலை கட்டடத்துக்கான ஆரம்பப் பணி போன்ற பல முன்னேற்றங்கள் இடம்பெற்று வந்த வேளையில், இவ்வாறான வைத்தியர் பற்றாக்குறை மிகுந்த கவலை தருவதாக உள்ளது.

கந்தளாய் பிரதேசத்தில் இருந்து திருகோணமலை நகர்ப்பகுதி வரையான 40 கிலோ மீற்றர் தூர நிலப்பரப்பில் வாழும் மக்களுக்கு உரிய மருத்துவ சேவைகளை வழங்குகின்ற ஒரே ஒரு பிரதேச வைத்தியசாலையாக இவ்வைத்தியசாலை காணப்படுவது.

மேற்படி விடயங்களை கவனத்தில் கொண்டு, மிக விரைவாக இவ்வைத்தியசாலைக்கு வைத்தியர் ஒருவரை பெற்றுத்தருமாறு பிரதேச வாசிகள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்

ஏ.எம். கீத்



# ஆரோக்கியம் கெட்ட ஆரோக்கியபுரம்

## அபிவிருத்தி என்ற போர்வையில் அழிக்கப்படும் வளங்கள்



சுப்பிரமணியம் பாஸ்கரன்



முல்லைத்தீவு, கொக்காவில் பிரதேசத்தில் சட்ட விரோத கிரவல் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட பகுதி, கடந்த வாரம் முற்றுகையிடப்பட்டு, கிரவல் அகழ்வில் ஈடுபட்ட கனரக வாகனங்களுடன் அதன் சாரதிகள் கைது செய்யப்பட்டு உள்ளமையானது, பிரதேச மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் இதுவரைகாலமும் இவற்றைப் பாதுகாக்க வேண்டிய அதிகாரிகள் கண்மூடியிருந்தார்களா? எனவும் கேள்வியெழுப்பி உள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்தில் 2,000 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பகுதிகளில் பெருங்காடுகள் அழிக்கப்பட்டு, கிரவல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை தொடர்பில் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதனால், புத்து வெட்டுவான், பழைய முறிகண்டி, ஐயன்கன் குளம், மருதங்குளம் உள்ளிட்ட பல விவசாய கிராமங்களில் வாழும் மக்கள் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பில், பலதரப்பட்ட நியாய பூர்வமான காரணங்களை அந்த மக்கள் முன்வைத்திருக்கின்றனர்.

போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்தி என்பது, பிரதான நோக்கமாக இருந்தாலும் வளங்களை அழிப்பது என்ற விடயத்தில், அக்கறை காட்ட வேண்டிய இன்றைய சூழலில், அவிருத்தி என்ற போர்வையில் ஏராளமான வளங்கள் அழிக்கப்படுகின்றன. இந்த வளங்கள் மீள் உருவாக்கம் அல்லது, அழிக்கப்படுகின்ற வளங்களுக்கு மாற்றீட்டு வளங்களை உற்பத்தி செய்தல் என்பது, இல்லாத நிலையும் காணப்படுகின்றது.

குறிப்பாக, இந்தப் பிரதேசத்தில் பல ஆயிரம் ஏக்கர் நிலங்களில் காடுகள் அழிக்கப்பட்டு, கிரவல் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கிராமிய போக்குவரத்துக்காகப் புனரமைக்கப்படும் வீதிகள் எவையும் கனரக வாகனங்கள் பயணிக்க கூடிய வகையில் பெரும்பாலும் புனரமைக்கப்படுவதில்லை. இவ்வாறான கிரவல் அகழ்வு மேற்கொள்ளப்படும் பிரதேசத்துக்கு அண்மித்த கிராமங்களில் இருக்கின்ற வீதிகள் எவையும், அவ்வாறு புனரமைக்கப்படவில்லை.

அதாவது, முல்லைத்தீவு மாவட்டத்தையும் கிளிநொச்சி மாவட்டத்தையும் பிரிக்கின்ற அக்கராயன் - முறிகண்டி வீதி, துணுக்காய் - கொக்காவில் வீதி என்பன புனரமைக்கப்பட்ட போதும், இந்த வீதிகளினூடாகக் கனரக வாகனங்களின் போக்குவரத்தின் காரணமாக, வீதிகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

இதனால் வறுமைக்கோட்டின் கீழ் அன்றாடம் இயற்கையோடும் வனவிலங்குகளோடும் போராடித் தங்களுடைய வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்லுகின்ற மக்கள், தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர் அதாவது, குறித்த கிராமங்களுக்குச் செல்லும் இந்த வீதிகள், புனரமைக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் கூட உரிய முறையில் பயன்படுத்தப்படாத நிலையில், கனரக வாகனங்களின் போக்குவரத்துக் காரணமாக, முழுமையாகச் சேதமடைந்திருப்பதால், இந்தக் கிராமங்களுக்கான போக்குவரத்துகள் கடும் நெருக்கடிகளுக்கு மத்தியில் மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது.

இந்தப் பிரதேசத்தில் நோய்வாய்ப்பட்டவரை உரிய காலத்துக்கு வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முடியாத நிலையில், பலர் உயிரிழந்த சம்பவங்கள் பதிவாகியிருக்கின்றன. இதைவிடக் கடந்த பத்து ஆண்டுகளில் இந்த மக்கள் அனுபவித்த துன்ப துயரங்களும் ஏராளம்.

அதாவது, ஒரு பாடசாலைக்கு ஆசிரியர் செல்வதாக இருந்தால், ஏ-9 வீதியில் இருந்து 600 ரூபாய் ஓட்டோவுக்குக் கொடுக்கவேண்டும். மீளவும் அந்த ஆசிரியர் ஏ9 வீதிக்கு வருவதற்கு 600 ரூபாய் கொடுக்க வேண்டும். அந்தப் பாடசாலையில் கற்பிக்கின்ற ஆசிரியர், தன்னுடைய சம்பளத்தின் பெரும்பகுதியை போக்குவரத்துக்கு செலவழிக்கிற ஒரு நிலைமையைக் காணமுடிகின்றது.

இதுபோன்று, தினக்கூலி செய்யும் மக்கள் படும் கஷ்டங்கள் ஏராளம். வளமான சமதரைகளாகவும் சோலைகளாகவும் காணப்பட்ட இந்தப் பகுதிகள், இன்று பல ஆயிரம் ஏக்கர் வரையான பகுதிகளில் காடுகள் அழிக்கப்பட்டு, கிரவல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு, பாரிய குன்றும் குழிகளுமாகக் காணப்படுகின்றன. குறிப்பாக, ஆரோக்கியபுரம் பகுதிகளிலும் இவ்வாறான நிலைமை காணப்படுகின்றது.

இந்த நிலையில், கடந்த வாரம் கொக்காவில் பிரதேசத்தில் சட்ட விரோத கிரவல் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட பகுதி, முற்றுகையிடப்பட்டு கிரவல் அகழ்வில் ஈடுபட்ட கனரக வாகனங்களுடன் அதன் சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதாவது, துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வனப்பகுதியிலேயே குறித்த முறையற்ற கிரவல் அகழ்வு முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. குறித்த விடயம் தொடர்பில், இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைவாக, கொழும்பிலிருந்து வருகை தந்த புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் மண் அகழ்வாராய்ச்சி தள சட்ட பிரிவினை அமலாக்கும் அதிகாரிகள், இராணுவப் புலனாய்வுப்பிரிவு அதிகாரிகளால் குறித்த பகுதி சுற்றிவளைக்கப்பட்டு சோதனையிடப்பட்டு, சட்டவிரோத செயற்பாட்டை தடுத்து நிறுத்தியதுடன், நடவடிக்கை மேற்கொண்டுள்ளமையானது மக்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதன்போது கிரவல் அகழ்வுக்கு அனுமதிக்கப்பட்டமைக்கு மாறாக, அகழ்வு மேற்கொள்ளப்பட்டு உள்ளமை அவதானிக்கப்பட்டதை அடுத்து அவர்கள் மீது நடடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அனுமதிக்கப்பட்ட பகுதிக்கு மேலதிகமாக அகழ்வு மேற்கொள்ளப்பட்டமை, அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மாறாக 20 அடிக்குமேல் அகழ்வு மேற்கொண்டமை போன்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த பிரதேசத்தில், 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர், பாரிய கிரவல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வந்துள்ள நிலையில், அவ்விடயம் தொடர்பில் ஊடகங்களில் செய்திகளும் வெளிக்கொண்டு வரப்பட்டன.

ஆனாலும், குறித்த பகுதியில் அகழ்வுப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டு வந்ததுடன், அங்கு சுற்றாடலைப் பாதிக்கும் வகையில் அகழ்வுப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த சட்டவிரோத செயற்பாடுகளை, இதுவரை கண்டுகொள்ளாத பிரதேச செயலகம், மாவட்ட செயலகம், வனவள பாதுகாப்பு பிரிவு, வனஜீவராசிகள் திணைக்களம், கனியவள திணைக்களம் உள்ளிட்ட அரச திணைக்களங்கள், அரசியல்வாதிகள் போன்ற பொறுப்புமிக்க பதவிகள் வகிப்போர் இந்த விடயங்கள் தொடர்பில் ஏன் கவனம் செலுத்தவில்லை என்பது தொடர்பில் மக்கள் தொடர்ந்தும் அதிருப்தி வெளியிட்டு வருகின்றனர்.



# ஒல்லிமடுவில் ஒளிந்திருக்கும் உண்மைகள்





வ. சக்தி
shagthivel@gmail.com

நீரின்றி அமையாது உலகு' என்ற வள்ளுவர் வாக்கில் புதைந்திருக்கும் உண்மையை, உலகில் வாழும் உயிர்கள் யாவும், நீரின் மகத்துவம் அறியும் போது உணர்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபையால், 'மிலேனியம் அபிவிருத்தி இலக்கு' உருவாக்கப்படும் போது, அதன் குறிக்கோள் 'இலக்கம் 7' இனை இற்றைப்படுத்தி, 2017 இல் நிலைபேறான பேண்தகு அபிவிருத்தி உருவாக்கும் போது, பாதுகாப்பான குடிநீர் வழங்கலின் முக்கியத்துவம் காரணமாக, 2030ஆம் ஆண்டளவிலே நீரின் தரம் மேம்படுவதும் உள்ளடக்கப்பட்டு இருந்தது.

நீர், உயிரொன்றின் பிறப்பிலும் இருப்பிலும் கைத்தொழில் அபிவிருத்தியிலும் முதன்மையான தீர்மானிக்கும் சக்தியாக உள்ளது. இருப்பினும் நாட்டின் பல பகுதிகளில், குடிப்பதற்கான சுத்தமான குடிநீரைப் பெறுவதில் பலஇன்னல்களை எதிர்நோக்கும் மக்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். அவ்வாறான ஒரு பிரதேச மக்ககளின் கதையே இது...

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பெரு நிலப்பரப்பில் போரதீவுப்பற்று பிரதேசத்துக்கு உட்பட்ட கிராமமே மண்டூர்.

இயற்கையான ஆறு, பச்சை பசேல் எனக் கம்பீரமாய் காட்சி தரும் மரங்கள், வேளாண்மை என அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற இயற்கையான அழகிய கிராமமே மண்டூர் ஆகும். மண்டூர் கிராமத்தின் தெற்கு கிராம சேவகர் பிரிவில் காணப்படுகின்ற அடிப்படை வசதிகளற்ற ஒரு கிராமமே ஒல்லிமடுவால் ஆகும்.

இங்கு வாழும் மக்கள், தமது அன்றாட ஜீவனோபாய தொழிலாக வேளாண்மை, விவசாயம், செங்கல் உற்பத்தி போன்ற தொழில்களில் ஈடுபடுகின்றனர். ஒல்லிமடுவால் கிராமத்தில் 51 வீடுகளில் 85 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்களின் பிரதான குறைபாடாக, குடிநீர் பிரச்சினை காணப்படுகின்றது.

ஒல்லிமடுவால் கிராமம் கிறவல், பாறைகள் நிறைந்த பகுதியாக காணப்படுவதால், கிணறு வெட்டி குடிநீரைப் பெறுவது கடினமான காரியமாகும். அத்துடன், ஆற்றை அண்டிய பகுதி என்பதால் குடிப்பதற்கு உகந்த நீரைப் பெறுவதும் சிரமமாகும். இதனால், ஆற்றுக்குச் சென்று பூவல் (ஆற்றோரத்தில் சிறிய குழி தோண்டி, நீரை வடித்து எடுக்கும் முறை) அமைத்து, அதில் ஊறும் நீரைக் குடிநீராகப் பயன்படுத்தி வருகின்றனர்.

2016ஆம் ஆண்டில், போரதீவுப்பற்று பிரதேச செயலக பிரிவுக்கு 'Ampara Phase 3' திட்டத்தின் மூலமாக, குடிநீர் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. குறித்த குடிநீர் திட்டத்தின் நீர் வழங்கல் பிரதான குழாய், ஒல்லிமடுவால் கிராமத்தின் கமநல கேந்திர நிலைய வீதி ஊடாகவே ஏனைய பகுதிகளுக்குச் செல்கின்றது. அம்பாறையிலிருந்து வரும் நீர்க்குழாய், ஒல்லிமடுவால் கிராமத்தை ஊடறுத்துச் செல்கின்ற போதிலும், கமநல கேந்திர நிலைய வீதியின் இருமருங்கிலும் வசிக்கும் 11 வீடுகள் மாத்திரமே, குடிநீர் இணைப்பைப் பெறுகின்றன.

இருப்பினும், கமநல கேந்திர நிலைய வீதியில் இருந்து செல்லும் 200 மீற்றர் முதல் 300 மீற்றர் நீளம் கொண்ட உள்வீதிகளில் வசிக்கும் 69 குடும்பங்களைக் கொண்ட 40 வீடுகளுக்கு, குடிநீர் இணைப்பு வழங்குவதற்கான குடிநீர் குழாய்கள் உள்வீதிகளில் பொருத்தப்படவில்லை. இதனால், இந்த உள் வீதிகளில் வசிக்கும் மக்கள், குடிநீர் இன்றி பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

"காலையில் நேரத்துக்கு எழுந்து குளித்துவிட்டுப் பாடசாலைக்குச் செல்வதற்குத் தண்ணீர் இல்லை; பக்கத்து வீட்டுக்குப் போய் தண்ணீரை எடுத்து வந்துதான் குளிக்கின்றோம். இதனால் பாடசாலைக்குச் செல்வதில் தாமதம் ஏற்படுகின்றது" என ஒல்லிமடுவால் கிராமத்திலுள்ள உயர்தரம் கற்கும் மாணவி ஒருவர் தெரிவிக்கிறார்.

ஒல்லிமடுவால் மக்கள் குடிநீரைப் பெறுவதற்காக, அப்பிரதேசத்திலுள்ள ஒரேயொரு கிணற்றுக்குச் சென்றும், குடிநீர் இணைப்புப் பெற்றுள்ள வீடுகளிலும் மனிதாபிமான ரீதியில் குடிநீரைப் பெறுகின்றனர். குளிப்பதற்கும், ஏனைய அன்றாட தேவைகளுக்கும் அருகிலுள்ள ஆற்று நீரைப் பயன்படுத்துவதுடன் ஆற்றுக்கு செல்லும் போது, முதலைகளின் நடமாட்டம், அட்டை கடி போன்றவற்றால் தாம் பெரிதும் துன்பப்படுவதாகவும் குழந்தைகளை வீட்டில் விட்டு விட்டு, வெயில் நேரங்களில் ஆற்றுக்கு சென்று நீரைப் பெற்று வர வேண்டிய தேவை காணப்படுவதாகவும் இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையால், ஒல்லிமடுவால் கிராமத்தில் 2016ஆம் ஆண்டு முதல் நிருமாணிக்கப்பட்டு வரும் நீர்த் தாங்கி ஒன்று இதுவரை பூரணப்படுத்தப்படாமல் உள்ளது.

"நாங்கள், மண்டூர் முதலாம்பிரிவின் ஒல்லிமடுவால் கிராமத்தில் வசித்து வருகின்றோம். கொலனித் திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற நாம் குடியிருக்கும் நிலத்துக்கு இன்னும் உறுதி கிடைக்கவில்லை; கேட்டால் வரவில்லை என்றுதான் சொல்கின்றார்கள். நாங்கள் ஓலைக் குடிசையில் இருந்தோம். அப்போது அரசாங்கம் தகரம் தந்தது. நாங்கள் காட்டுக்குள் இருப்பது போன்றுதான் உள்ளது" எனத் தெரிவிக்கிறார் 'கிழக்கின் ஒளி' கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் இ. இராசரெத்தினம்.

தமது வாழ்வு கடந்து போனாலும் தமது பிள்ளைகள், அடுத்த சந்ததியினர் கல்வியில் சிறந்து விளங்கவேண்டும்; அப்போதுதான் அவர்களது எதிர்காலம் சிறந்துவிளங்கும் என்பது ஒல்லிமடுவால் கிராமத்தவர்களின் பொதுவான அபிப்பிராயமாக உள்ளது.

"எமது கிராமத்திலுள்ள 32 குடும்பங்களுக்கு வீடு கட்டுவதற்கு அரசாங்கத்தால் 120,000 ரூபாய் வழங்கப்பட்டது. தற்போது அந்தக் காசை, மாதாந்தம் 1,000 ரூபாய் வீதம் மீளத் செலுத்துமாறும், அவ்வாறு செலுத்தாதுவிட்டால் வழக்குப்போட உள்ளதாகவும் சொல்கின்றார்கள். எமக்குக் காசு தரும்போது ஒன்றும் சொல்லவில்லை; தற்போதுதான் சொல்கின்றார்கள். அது கடனடிப்படையில்





வீடுகட்டுவதற்குத் தந்த காசு என்று. எமக்குக் காசு தரும்போது, வீடுகட்டுவதற்குக் கடனாகத் தருகின்றோம் என யாரும் சொல்லவில்லை. தற்போது மீளச் செலுத்தச் சொன்னால், எவ்வாறு செலுத்துவது? அந்த நிதியில் ஓர் அறையும் குசினியும் கட்டியுள்ளோம். அவ்வாறான வீட்டில் 3, 4 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றார்கள். குடிநீருக்காக இருக்கும் ஒரு கிணறும் ஏப்ரல் மாத்திலிருந்து வற்றிவிடும். எமது பாலர் பாடசாலையையும் விருத்தி செய்யவேண்டும். எமது கிராமம் பின்தங்கிய நிலையில் உள்ளது. எமது கிராமமும் ஏனைய கிராமங்கள் போல் முன்னேறவேண்டும் என்பது எனது ஆசையாகவுள்ளது" என்கிறார் மணி சறோஜாதேவி.

"வீடமைப்பு அதிகார சபையால் வீடு கட்டுவதற்கு வழங்கிய நிதியை மாதாந்தம் 1,000 ரூபாய் வீதம் சிலர், மிகவும் சிரமத்தின் மத்தியில் மீளச் செலுத்தி வருகின்றார்கள். ஆனால், அந்த நிதியை மீளச் செலுத்தும் அளவுக்கு இங்குள்ள மக்களின் நிலை இல்லாமலுள்ளது. இக்கிராமத்திலுள்ள குறைபாடுகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளேன். எது எவ்வாறு அமைந்தாலும் அரசாங்க அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் எமது ஒல்லிமடுவால் கிராம மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண உடன் முன்வர வேண்டும்" என போரதீவுப்பற்றுப் பிரதேச சபையின் ஒல்லிமடுவால் வட்டார முன்னாள் உறுப்பினர் செல்லத்துரை திருக்குமார் தெரிவித்தார்.

"பிரதான வீதியால் குழாய்நீர் செல்கின்றது. கிராம மக்கள் தனிப்பட்ட இணைப்புகள் பெற்று, அதிலிருந்து குடிநீரைப் பெற்றுக் கொள்ளலாம். அவர்கள் அந்நீரைப் பெறுவதற்கு விண்ணப்பித்தால், சமூர்த்தி பயாளிகளுக்கு சலுகைகள் உள்ளன. இணைப்பைப் பெற்றுக்கொள்ளும் செலவும் குறைவாகத்தான் வரும். பிரதேச செயலகமும் பொது மக்களும் இணைந்து தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு முன்வைந்துள்ள கோரிக்கைக்கு அமைவாக, ஒல்லிமடுவால் கிராமத்தில் உள்ள இரண்டு வீதிகளுக்கு 100 மீற்றர் வரையான நீளத்துக்கு குழாய் நீர் பதிக்கும் வேலைத்திட்டம் இரண்டு மாதங்களுக்குள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதனால் குறிப்பிடத்தக்களவு குடும்பங்கள் நீரைப் பெற முடியும்" என போரதீவு பற்று, பிரதேச செயலாளர் இராசநாயகம் இராகுலநாயகி தெரிவித்தார்.

பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள், சிறார்கள், முதியவர்கள் என பலதரப்பட்டவர்களும் இக்கிராமத்தில் நீருக்காக அல்லற்படுவதை அவதானிகக முடிகின்றது. எது எவ்வாறு அமைந்தாலும், ஒல்லிமடுவால் கிராமத்தில் உள்ளவர்களும் இந்நாட்டுப் பிரஜைகளே! அவர்களுக்கும் அடிப்படைத் தேவையாகவுள்ள சுத்தமான குடிநீர், வீட்டு வசதிகள், மலசலகூட வசதிகள், போக்குவரத்து உள்ளிட்டவற்றை ஓரளவுக்கேனும் பூர்த்தி செய்து கொடுக்க வேண்டியது சம்பந்தப்பட்ட அதிகாரிகளினதும் மக்கள் பிரதிநிதிகளின் கடமையாகும்.

யாழ்ப்பாணத்தைச் சூழக் காணப்படும் சுறா, திருக்கை மீன்கள்

# இக்கட்டான வாழிடங்கள்





சுறா, திருக்கை ஆகியவை (அடுக்கச் செவுள் மீன்கள்) குருத்தெலும்பைக் கொண்ட விசேடமான மீன் வகைகளாகும். கடல் உணவுச் சங்கிலியில் இவை முக்கிய அங்கம் வகிப்பதுடன், பல உயர் வெப்ப மட்டத்தில் காணப்படுவதுடன், இயற்கை சமநிலையை பேண உதவுகின்றன.

மீன்பிடி, நீண்ட ஆயுள் காலம், குறைந்த விருத்தி வீதம், காலம் தாழ்ந்த முதிர்வு, குறைந்த இனப்பெருக்க வாய்ப்பு போன்ற வெளியக அழுத்தங்களால் பெரும்பாலான அடுக்கச் செவுள் மீன்கள் அதிகளவு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளன.

துரதிர்ஷ்டவசமாக, அளவுக்கதிகமாக மீன்பிடித்தல், இதர மனித செயற்பாடுகளால் மாசடையச் செய்யும் செயற்பாடுகள் (பவளப் பாறைகள், கண்டல்பகுதிகள் போன்ற அவற்றின் வாழிடப் பகுதிகளை அழிவடையச் செய்வது) போன்றன, உலகளாவிய ரீதியில் சுறா, திருக்கை ஆகியவற்றின் வாழிடப் பகுதிகளை அபாயாத்துக்கு உட்படுத்தியுள்ளன. செதில்கள், இறைச்சி, செவுள்கள், லிவர் எண்ணெய், இதர சார்புப் பொருட்கள் போன்றவற்றுக்காக இவை பெருமளவில் இலக்கு வைக்கப்பட்டும் எழுமாற்றாகவும் பிடிக்கப்படுகின்றன.

பெருமளவான மீன்பிடிச் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்படாதவையாகவும் முறையற்ற வகையிலும் இடம்பெறுகின்றன. உயிரினங்கள் ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்டு உள்ளமையால், சூழல்கட்டமைப்பு சமச்சீர் பரம்பலுக்கு அவற்றின் பிரசன்னம் முக்கியமானவையாக அமைந்துள்ளது. ஏதேனும் ஒரு வகை உயிரினத்தை அகற்றுவதன் காரணமாக, குறிப்பாக சுறா போன்ற உயிரினத்தை அகற்றுவதால், சூழல் கட்டமைப்பிலும் அதனைச் சார்ந்த உயிரினங்களிலும் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தும்.

அண்மைக் காலமாக, உலகளாவிய ரீதியில் சுறாக்கள், திருக்கை மீன்கள் அதிகளவு பாதுகாப்புக் கவனத்தை ஈர்த்திருந்தன. எவ்வாறாயினும், மேலும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன. அவற்றை வினைத்திறனான முறையில் பாதுகாப்பதற்காக, அவற்றின் வரலாறு, தொகை நிலை, பிரசன்னங்கள், நகர்வுகள் தொடர்பிலும், கடல்சார் சூழல்கட்டமைப்புகளில் அவற்றின் பங்கு தொடர்பிலும் ஆராயப்பட வேண்டியுள்ளது.

இந்தத் தகவல்களுடன் எம்மால், இவற்றின் பரம்பல் வீழ்ச்சியடைவதை தடுப்பது தொடர்பிலும், அவற்றை மீட்சியடையச் செய்யவும் அவசியமான விஞ்ஞான ரீதியான பரிந்துரைகளை வழங்க முடியும் என்பதுடன், அதிகளவு உற்பத்தித்திறனான உயிரினங்கள் தொடர்பான நிலைபேறான மீன்பிடி செயற்பாடுகளுக்கும் உதவக்கூடியதாக இருக்கும்.

இலங்கை தீவு எனும் வகையில் அதிகளவில் கடற்றொழிலில் தங்கியுள்ளது. சுறா, திருக்கை மீன்களில் அதிகளவு புரதச் சத்துக் காணப்படுவதுடன்,



டேனியல் பெர்ணான்டோ

தொழில்வாய்ப்பாகவும் கொள்ள முடியும். கடற்றொழிலில் ஈடுபடுவோரின் வாழ்வாதாரத்துக்கு உதவுவது முக்கியமானதாகும்.

எவ்வாறாயினும், நீண்ட கால நிலைபேறாண்மை தொடர்பில் இந்த இனங்களின் நிலைத்திருப்பு பற்றி கவனம் செலுத்த வேண்டும். ஏதேனும் வகை மீனினம் அழிவடைந்தால், வணிக ரீதியில் இந்த மீன்பிடியில் ஈடுபட்டு அதில் தங்கியிருக்கும் வாழ்வாதாரங்களும் வீழ்ச்சியடையும்.

2017 ஆம் ஆண்டு முதல், ப்ளு ரிசோர்சஸ் ட்ரஸ்ட் (BRT) அமைப்பால் இலங்கையில் சுறா, திருக்கை மீன்கள் தொடர்பான ஆய்வுத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இதில், இலங்கையில் காணப்படும் சுறா, திருக்கை மீன் இனங்களின் அடக்கக்கூறுகள், அவை தரையிறங்கும் பகுதிகள் தொடர்பில் ஆராய்ந்து, அவற்றின் வீச்சளவு தொடர்பான விடயங்கள் ஆராயப்படுவதுடன், சுறா, திருக்கை மீன்கள் தொடர்பான



கோபிராஜ் ராமஜெயம்

உயிரியல், சூழலியல் அறிவை மேம்படுத்தும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

மீன்பிடி நிர்வாகத்தின் வினைத்திறனைத் தீர்மானிப்பது தொடர்பான எதிர்கால குடித்தொகை போக்குகள் தொடர்பில் மதிப்பாய்வு செய்வதற்கு இந்த தரவுக்கோவை அடிப்படை ஆதாரமாக அமைந்திருக்கும்.

BRT இன் தரவுகளின் பிரகாரம், இலங்கையின் அரைப் பங்கு சுறா, திருக்கை மீன் இனங்கள், யாழ். குடா பகுதியில் சஞ்சரிப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. இந்தப் பிராந்தியத்தில், சிறியளவிலான இயந்திர பொறிமுறை, பயன்பாடற்ற மீன்பிடிமுறை அமலிலுள்ளது. இவர்களின் மீன்பிடி நடவடிக்கைகள் பெரும்பாலும் கரையோரப் பகுதிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பகுதிகளில் இந்தப் பால் உளுவை *sharpnose guitarfish (Glaucostegus granulatus, an IUCN Red List Critically Endangered species)* போன்ற உயிரினங்கள் அதிகளவு காணப்படுகின்றன.

அதைத் தொடர்ந்து, BRT இனால் டோக்கியோ சீமெந்து குரூப் உடன் இணைந்து, இலங்கையின் வட பிராந்தியத்தில் சுறா, திருக்கை மீன்கள் இனங்காணல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இந்த மீன்பிடி, அதனுடன் தொடர்புடைய மீனவ சமுதாயங்களின் புரிந்துணர்வை மேம்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளிலும் கவனம் செலுத்தப்படுகின்றன.

இந்த விஞ்ஞான ரீதியான தரவுகளுடன், சுறா, திருக்கை மீன்களை அளவுக்கதிகமாகப் பிடிப்பதைத் தவிர்ப்பது, அவற்றின் மீட்சியை உறுதி செய்யும் நிலைபேறான வினைத்திறனான நிர்வாக செயற்பாடுகள் பரிந்துரைக்கப்படும்.

## கட்டுரையாளர்களைப்பற்றி:

### டேனியல் பெர்ணான்டோ

இலங்கையின் கடல்சார் ஆய்வுகள், பாதுகாப்பு அமைப்பான ப்ளு ரிசோர்சஸ் ட்ரஸ்ட் ஸ்தாபகரும் கடல்வாழ் உயிரியில் நிபுணராகவும் டேனியல் திகழ்வதுடன், அடுக்கச்செவுள் மீன்கள் தொடர்பான இலங்கையின் ஆய்வுத்திட்டத்துக்கு இவர் தலைமை தாங்குகின்றார். தற்போது இந்து சமுத்திரத்துக்கான *IUCN Shark Specialist Group* இன் பிராந்திய இணைஉபதலைவராகவும், *MCAF* அங்கத்தவராகவும், *CMS Scientific Council* இன் பருவகால குழுவின் உபதலைவராகவும் செயலாற்றுகின்றார்.

### கோபிராஜ் ராமஜெயம்

இலங்கையின் அடுக்கச் செவுள் மீன்கள் தொடர்பான செயற்றிட்டத்தில் ப்ளு ரிசோர்சஸ் ட்ரஸ்ட் உடன் இணைந்து கோபிராஜ் கடமையாற்றுவதுடன், ஒரு கடல்சார் உயிரியல் நிபுணராகவும் திகழ்கின்றார். 2017 ஆம் ஆண்டு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பை பூர்த்திசெய்து, தற்போது யாழ். குடாநாட்டைச் சூழ்ந்து காணப்படும் அதிகளவு ஆபத்தை எதிர்கொண்டுள்ள பால்உளுவை (*Sharpnose guitarfish*) மீன்வகைகள் தொடர்பான உயிரியல் கற்கையில் *MPhil* பட்டப்படிப்பை தொடர்கின்றார்.





# வாய்க்குள் வெடிக்கும் வெங்காய வெடிகள்

## முல்லைத்தீவில் தொடரும் யானை-மனித மோதல்

செ. கீதாஞ்சன்

வடக்கில் அதிகளவான காடுகளையும் குளங்களையும் கொண்ட பிரதேசமாகவும் அதிகளவில் விவசாய செய்கையில் ஈடுபடும் விவசாயிகளை கொண்ட பிரதேசமாகவும் சனத்தொகை வீதம் குறைவான மாவட்டமாகவும் முல்லைத்தீவு மாவட்டம் காணப்படுகின்றது.

இவ்வாறான இயற்கை வளங்களைக் கொண்ட மாவட்டத்தில்தான் மனிதர்களுக்கும் யானைகளுக்கும் இடையில் தொடர்ச்சியாக மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில், இவ்வாறு யானை-மனித மோதலால் இந்த ஆண்டு, இதுவரை நான்கு யானைகள் உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களத்தின் முல்லைத்தீவு சுற்றுவட்ட அலுவலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஒரு தசாப்த காலத்துக்கு மேல், மீள்குடியேறிய மக்களாக முல்லைத்தீவு மாவட்ட மக்கள் காணப்படுகின்றார்கள். இந்த மக்களுக்கான அடிப்படைத் தேவைகள் அரசாங்கத்தால் பூர்த்திசெய்து கொடுக்கப்பட்டாலும் அரசாங்கத்தின் சொத்தாகக் கருதப்படும் காட்டு யானைகளைப் பாதுகாக்க அரசாங்கம் தவறிவிட்டது என்றுதான் சொல்லவேண்டும்.

அடர்ந்த காடுகள் பற்றைக்காடுகள், பாரிய வனங்கள், தேக்க மரஞ்சோலைகள் என்று வன்னியில் காடுகள் இயற்கையாகக் காணப்படுகின்றன. இந்தக் காடுகளைப் பாதுகாக்க, வனவளத்திணைக்களம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இருந்தும் மனிதர்களால் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் காடுகளை ஈடுசெய்வதற்காக, எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை என்பது கவலையளிக்கின்றது.

கிரவல்அகழ்வு, மணல்அகழ்வு, காணிபிடிப்பு போன்ற சட்டத்துக்கு எதிரான நடவடிக்கைகள், தொடர்ச்சியாக அதிகரித்து வரும் மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் காணப்படுகின்றது. இயற்கை வளங்களான காடுகள், அதிகளவு அழிக்கப்பட்டு, நிலப்பிடிப்பாளர்களால் விவசாய நிலங்களாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கும் நிலை தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது.

இதை விட, காடுகளில் உள்ள பெறுமதியான பாலைமரங்கள், முதிரைமரங்கள் என்பன வெட்டப்பட்டு, மரக்கடத்தல்காரர்களால் கடத்தப்பட்டு வருகின்றமையும் இயற்கை அழிப்பின் உச்சத்தை எடுத்துக் காட்டுகின்றது.

இயற்கை வளத்துடன் ஒன்றாக வாழ்ந்துவரும் உயிர் ஜீவன்களாகவே காட்டு யானைகள் காணப்படுகின்றன. எந்தக் காடுகளில் யானைகள் வாழ்கின்றனவோ, அந்தக் காடுகள் பெருகவும் வளம்மிக்க காடாகவும் இருக்கும் என்பது சுற்றுச்சூழல் பாதுகாப்புவியலாளர்களின் கருத்தாகும். இந்நிலையில், யானை - மனித மோதல் என்பது, முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்கு உட்பட்ட ஒதியமலை கிராமத்தில் மனித மோதலால் பாதிக்கப்பட்ட யானை ஒன்று, 17.07.21 அன்று உயிரிழந்துள்ளது. இந்த யானையுடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் நான்கு யானைகள் உயிரிழந்த தகவல் வெளியாகியுள்ளது.

காடுகள் தொடர்ச்சியாக அழிக்கப்பட்டு வருவதால், காட்டு யானைகள் மக்கள் குடியிருப்புகளை நோக்கி நகருகின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில் யானைகள் அதிகளவில் விவசாய நிலங்களைச் சேதப்படுத்தி வருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளார்கள். ஆண்டு தோறும் சுமார் 1,000க்கும் மேற்பட்ட ஏக்கர் நெற்செய்கையைச் சேதப்படுத்தும் காட்டுயானைகள், இலட்சக்கணக்கான பயன்தரு தென்னை, மா, பலா போன்ற வான் பயிர்களையும் அழித்து வருகின்றன.

இதனால், யானைக்கும் மனிதர்களுக்கும் இடையில் தொடர்ச்சியாக மோதல்கள் இடம்பெறும் மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் காணப்படுகின்றது. ஒதியமலையில் உயிரிழந்தது வயது முதிர்ந்த பெண்யானையாகும். இந்தப் பெண்யானைக்கு வாய்க்குள் வெடி வெடித்ததால் உணவு உண்ணமுடியாத நிலையில், கடந்த ஒரு வாரமாக ஒதியமலை பெரியகுளம் வயல் வெளியில் அலைந்து திரிந்துள்ளது.

யானை பலமாக இருக்கும் போது, அதனை யாராலும் அடக்கிவிட முடியாது. ஆனால், அதன் உடல்பலவீனமான நிலையை உணரும் போது, அது மனிதர்களைத் தேடி வரும்; இவ்வாறுதான் இதுவும் நடந்தேறியுள்ளது.

விவசாயிகள், தங்கள் விவசாய நிலங்களை யானைகளிடம் இருந்து காப்பாற்றுவதற்காக, வனஜீவராசிகள் திணைக்களத்தால் வெடிகள் வழங்கப்படுகின்றன. முல்லைத்தீவு மாவட்டத்துக்கான வனஜீவராசிகள் திணைக்களம் ஒட்டுசுட்டான் பகுதியிலேயே அமைந்துள்ளது.

30 கிலோமீற்றருக்கு அப்பால் உள்ள கொக்குத்தொடுவாயில் இருந்தும் மறுபக்கத்தில் துணுக்காயில் இருந்தும் விவசாயிகள் வெடியைப் பெற்றுக்கொள்ள வரவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக கவலை தெரிவித்துள்ளார்கள்.

இவ்வாறு வெடி கொழுத்திப் போட்டும் யானைகளை கட்டுப்படுத்த முடியாத இடங்களில், சில விவசாயிகள் சட்டவிரோதமான வெடிபொருட்களைப் பயன்படுத்தி, யானைகளைக் கலைக்கின்றார்கள். அவற்றில் ஒன்றுதான் 'வெங்காய வெடி' எனப்படும் வெடியாகும்.

பூசணிக்காய், பெரிய காய்களுக்குள் வெடியை வைத்து, யானை வரும் விவசாய பகுதிகளில் வைத்துவிடுவார்கள். இவ்வாறு சட்டவிரோதமான முறையில் பன்றிக்காகவும் வைப்பார்கள்.

இவ்வாறு, யானை இத்தகைய காய்கறிகளை உண்ணும் போது, வாய்க்குள் வெடிக்கின்றன. இதன்போது யானை அலறி அடித்துக் கொண்டு ஓடும். இதன் பின்னர், அந்தப் பக்கத்துக்கே யானை வராது... இவ்வாறுதான் நாள்தோறும், முல்லைத்தீவு மாவட்டத்தில் யானை-மனித மோதல்கள் தொடர்சியாக அதிகரித்து வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக்கிராமங்கள், விவசாயக் கிராமங்களுக்கான யானை வேலி அரசாங்கத்தால் போட்டுக்கொடுக்கப்படவில்லை என விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றார்கள். சில இடங்களில், யானை வேலி அமைக்க பரிந்துரைக்கப்பட்டு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டும் அரசியல் காரணங்களால் அது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட நிலைமையையும் காணக்கூடியதாக உள்ளது.

மறுபக்கத்தில், முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரும்பான்மை இன மக்களைக் கொண்ட பிரதேசமாகக் காணப்படும் வெலிஓயா பிரதேசத்தில், விவசாய நிலங்கள் உள்ள அனைத்துப் பகுதிகளுக்கும் யானை வேலி அமைத்துக் கொடுக்கப்பட்டு பராமரிப்புகளும் நடைபெற்று வருகின்றன. இது தமிழ் மக்களை பொறுத்தமட்டில் கவலையளிக்கும் ஒருசெயல் என பார்க்கப்படுகின்றது.

யானைகளைக் காடுகளுடன் மட்டுப்படுத்தி வைத்திருக்க யானை வேலியே முக்கியமானதாகக் காணப்படுகின்றது. இந்த யானை வேலி இல்லாத நிலையில், பல இலட்சம் ரூபாய் பெறுமதியான அழிவுகளை, விவசாயிகள் தொடர்ச்சியாக சந்தித்துவரும் வேளையில், யானைகளும் இவ்வாறு அழிந்துகொண்டுதான் செல்லும் என்பது, விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ள கவலையாகும். யானைகளின் அழிவில் இருந்து தங்கள் விவசாய உற்பத்திப் பொருட்கள் பாதுகாக்கப்படுமாக இருந்தால், சரியான அறுவடையைப் பெற்றுக்கொண்டு விவசாய உற்பத்தியில் உயர்ந்து செல்லும் விவசாயிகளாக மாற்றம் காணலாம் என்பது முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளின் எதிர்பார்ப்பாகும்.

அரச திணைக்களங்கள், அரச அதிகாரிகள் இந்தப் பிரச்சினைகளுக்குச் சரியான நடவடிக்கையை எப்போது எடுப்பார்கள்? யானைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? என்ற கேள்விகளுக்கான பதில்களை வேண்டி, முல்லைத்தீவு மாவட்ட விவசாய மக்கள் காத்திருக்கின்றார்கள்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 24 ஜூலை 2021, இல. 8, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.